தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### திருந்திய நெல்சாகுபடி முறையில் இயந்திரம் மூலம் நடவு செயல் விளக்கம்

உத்தமபாளையம் பகுதியில் தற்போது 2-ஆம் போக சம்பா சாகுபடிக்கு நாற்று நடும் பணிகள் நடந்துவருகின்றன. வேளாண்மைத்துறை மூலம் திருந்திய நெல்சாகுபடி முறையில் இயந்திரம் மூலம் நடவுசெய்யும் செயல்விளக்கம் நடைபெற்றது. கம்பம் பள்ளத்தாக்கில் முல்லைப் பெரியாறு அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீரின் மூலம் 2-ஆம் போக நெல் சாகுபடி சுமார் 14,707 ஏக்கர் பரப்பளவில் நடைபெறுகிறது. உத்தமபாளையம், ராயப்பன்பட்டி, ராமசாமிநயக்கன்பட்டி மற்றும் கோகிலாபுரம் பகுதிகளில் தற்போது 2-ஆம் போகத்துக்கு நாற்று நடும் பணிகள் நடந்து வருகிறது. கூலித்தொழிலாளர்கள் பற்றாக்குறையை போக்கும் வகையில் வேளாண்பொறியியல் துறையும், வேளாண்துறையும் இணைந்து இயந்திரம் மூலம் நெல் நடவு செயல்விளக்கம் அளித்தனர்.இதன் நன்மைகள் குறித்து அதிகாரிகள் கூறியதாவது: நெல்நடவு இயந்திரத்தின் விலை ரூ.9.70 லட்சம். இதில் மானியமாக ரூ.4 லட்சம் வரை பெறலாம். 1 ஏக்கர் நடவு செய்ய 1 மணி நேரம் போதும். முக்கால் லிட்டர் பெட்ரோலே போதுமானது. குறுகிய நேரத்தில் அதிக பரப்பளவில் நட முடியும். விதை நெல் வீணாவதை தடுக்கலாம். களை எடுக்கும் நேரமும் செலவும் மிகக்குறைவு. சரியான இடைவெளியில் நாற்றை நடும்போது சூரிய வெளிச்சம், காற்றோற்றட்டமும் பயிருக்கு முழுமையாக கிடைக்கும். பூச்சிகள் மற்றும் நோய்களிலிருந்து பாதுகாப்பதோடு நல்ல விளைச்சலும், அதிகமான லாபமும் கிடைக்கும் என்றனர். விளக்க கூட்டத்திற்கு வேளாண்மை பொறியியல் துறையின் உதவி செயற்பொறியாளர் முகமது அலி, வேளாண்மை உதவி இயக்குநர் ராஜ் மோகன், உதவிப் பொறியாளர் ராதா கிருஷ்ணன், துணை வேளாண்மை அலுவலர் சின்னவெள்ளியப்பன், உதவி வேளாண்மை அலுவலர்கள் பால்முத்து, மோகன் தாரியா பட்ஜக், மணிகண்டன் கலந்துகொண்டனர்.

## மஞ்சளாறு அணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு

பெரியகுளம் அருகே உள்ள மஞ்சளாறு அணையிலிருந்து பாசனத்துக்கு வெள்ளிக்கிழமை தண்ணீர் திறந்து விடப்பட்டது. தமிழக முதல்வரின் உத்தரவின்பேரில்பேரில், அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தண்ணீரை திறந்துவிட்டார். இதில் மாவட்ட ஆட்சியர் கே.எஸ்.பழனிசாமி, ஏ.லாசர் எம்.எல்.ஏ, மாவட்ட அதிமுக செயலர் டி.சிவக்குமார், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்எம்.செல்லமுத்து, பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர் இ.தமிழரசன், கண்காணிப்புப் பொறியாளர் சி.ராஜேஷ், செயற்பொறியாளர் ஜி.காசிப்பாண்டியன் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். இந்த அணையின் உயரம் 57 அடி. இதில் 45.60 அடி அளவுக்கு தண்ணீர் உள்ளது. வினாடிக்கு 225 கனஅடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதன் மூலம் தேனி மாவட்டத்தில் 3148 ஏக்கர் நிலங்களும், திண்டுக்கல் மாவட்டத்தில் 2111 ஏக்கர் நிலங்களும் உள்பட மொத்தம் 5259 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

## ராமேசுவரத்தில் மர்ம நோய் தாக்கி ஆடுகள் சாவு:நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

ராமேசுவரம் பகுதியில் சில மாதங்களாக ஆடு, மாடு, கோழி போன்றவை மர்மமான முறையில் இறந்து வருகின்றன. இது தொடர்பாக நோய்த் தடுப்பு நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ராமேசுவரம் திருக்கோயிலின் தெற்கு வாசல், ரயில்வே நிலையம் வளாகத்தில் புதன்கிழமை அதிகாலை 6 ஆடுகள் இறந்தும். அதே பகுதிகளில் நான்கு ஆடுகள் மயக்கமடைந்த நிலையிலும் கிடந்தன. இறந்த ஆடுகள் யாருடையது என தெரியாததால் நகராட்சி நிர்வாகம் அப்பகுதியிலிருந்து ஆடுகளை அப்புறப்படுத்தினர். மேலும், ஆடுகள் திடீரென்று இறந்துள்ளதால் கோமாரி நோய் தாக்கியிருக்கலாம் என அப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

எனவே, ராமேசுவரம் கால்நடை மருத்துவர்கள் உடனடியாக கால்நடைகளுக்கு தடுப்பு மருந்துகள், ஊசிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

### பவானிசாகர் நீர்மட்டம் 68.14 அடி

பவானிசாகர் அணை நீர்மட்டம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி 68.14 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 1,181 கன அடி நீர் வந்தது. அணையிலிருந்து ஆற்றில் 1,150 கன அடி நீரும், வாய்க்காலில் 2,000 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 6.6. டி.எம்.சி.

### பால் விலையை உயர்த்துமாறு விவசாய சங்கம் கோரிக்கை

பால் கொள்முதல் விலையை உயர்த்துமாறு தமிழக அரசை கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்கம் கோரியுள்ளது.

சூலூரில் நடைபெற்ற கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்கக் கூட்டத்தில் அதன் கோவை மாநகர் மாவட்டத் தலைவர் டாக்டர் தங்கராசு பேசியதாவது:

தமிழக அரசு பால் கொள்முதல் விலை சம்பந்தமாக முத்தரப்புப் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும். அதாவது, பால் உற்பத்தியாளர் சங்கம், விவசாயிகள் சங்கம், ஆவின் நிறுவனம் ஆகியவற்றுடன் அரசு பேச வேண்டும்.

எருமைகளைப் பராமரிக்க தீவனச் செலவு அதிகம் ஏற்படுகிறது. எனவே தற்போது அரசு அளித்துள்ள பால் கொள்முதல் விலை உயர்வான ரூ. 3 எந்தப் பயனையும் அளிக்காது. எனவே பால் கொள்முதல் விலையை அரசு உயர்த்த வேண்டும். மாட்டுப் பாலுக்கு லிட்டருக்கு ரூ. 30-ம் எருமைப் பாலுக்கு லிட்டருக்கு ரூ. 40-ம் வழங்க வேண்டும்.

மாட்டுத் தீவன உற்பத்தியைப் பெருக்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசே தீவனம் வாங்கி பால் உற்பத்தியாளர்களுக்கு சலுகை விலையில் வழங்க வேண்டும் என்றார்.

### கறவை மாடுகள் வாங்க 36 பேருக்கு கடனுதவி

சேத்துப்பட்டு ஒன்றியத்தைச் சேர்ந்த ஆத்துரை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் சார்பில் கறவை மாடுகள் கடன் உதவி வழங்கும் விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இவ் விழாவுக்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத் தலைவர் ராகவன் தலைமை வகித்தார். போளூர் கள மேலாளர் இளங்கோ,சரக மேற்பார்வையாளர் முத்து, ஊராட்சி மன்றத் தலைவர் அபிராமி வெங்கடேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.மன்சுராபாத் பால் உற்பத்தியாளர் சங்க தலைவர் ராஜேந்திரன் வரவேற்றார். இதில் மன்சுராபாத் ஊராட்சியைச் சேர்ந்த பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் 36 பேருக்கு தலா ரூ.25 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ. 9 லட்சம் கறவை மாடுகளுக்கு வாங்க கடனுதவி வழங்கப்பட்டது. ஒன்றியக் குழு உறுப்பினர் பூவாத்தா ராகவன்,ஆத்துரை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கச் செயலாளர் மண்ணு,பால் உற்பத்தியாளர் சங்கச் செயலாளர் அண்ணாமலை,முன்னாள் தலைவர் சிவகுருநாதன்,துணைத் தலைவர் ஜெயசங்கர்,வேலூர் மண்டல ஆவின் கால்நடை மருத்துவர் ஆனந்தகுமார் மற்றும் ஆத்துரை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கப் பணியாளர்கள், பால் உற்பத்தியாளர் சங்கப் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

### "கால்நடைகளுக்கு 100% தடுப்பூசி போட வேண்டும்

அனைத்து கிராமங்களிலும் உள்ள கால்நடைகளுக்கு 100% தடுப்பூசி பாதுகாப்பை மருத்துவர்கள் உறுதிப்படுத்த வேண்டும் என்று கால்நடை பராமரிப்புத் துறையின் இயக்குநர் பழனிச்சாமி கூறினார்.

கால்நடை நோய்த் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில், கால்நடை மற்றும் கோழிப் பண்ணை பொருளாதார அடிப்படையில் முக்கியத்துவம், வளர்ந்துவரும் நோய்கள் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு குறித்த கருத்தரங்கம் ராணிப்பேட்டையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில் பழனிச்சாமி மேலும் பேசியதாவது:

கால்நடைகள் கால் மற்றும் வாய் நோய் தாக்குதலுக்கு உள்ளாகின்றன. இந்நோய்கள் உலக மயமாக்கல் காரணமாக வெளிநாடுகளில் இருந்தும், வெளிமாநிலங்களில் இருந்தும் எளிதாக பரவக்கூடிய வாய்ப்புகள் அதிகம் உள்ளன. நோய் தாக்குதல் இன்றி பாதுகாக்கப்படும் கால்நடைகளின் தரமான

இறைச்சி மற்றும் பால்பொருள்கள் தயாரிப்புகளுக்கு சர்வதேச வர்த்தக வாய்ப்புகள் சிறப்பாக உள்ளன என்றார்.

கோட்டாட்சியர் மு.பிரியதர்ஷினி, சென்னை கிங் ஆராய்ச்சி நிலைய இயக்குநர் பி.குணசேகரன், ராணிப்பேட்டை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் வி.பிரபாகரன், மருத்துவர் சரவணன், கோமாரி நோய் ஆராய்ச்சி அலுவலர் கோகிலா பிரபாகரன் உள்ளிட்டோர் பேசினர்

**நோயால் இறந்த கால்நடைகளுக்கும் இழப்பீடு வழங்க விவசாயிகள் வலியுறுத்தல்**

தருமபுரி மாவட்டத்தில் நோய் தாக்கி உயிரிழந்த அனைத்துக் கால்நடைகளுக்கும் உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தினர்.

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஆட்சியர் கே.விவேகானந்தன் தலைமையில் வெள்ளிக்கிழமை விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் மல்லையன் பேசியது:

தருமபுரி மாவட்டத்தில் அண்மையில் கோமாரி நோய் தாக்கியதில் நூற்றுக்கணக்கான கால்நடைகள் உயிரிழந்தன. இதில் காப்பீடு செய்யப்பட்ட கால்நடைகளுக்கு மட்டும் இழப்பீடு வழங்குவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். உயிரிழந்த அனைத்து கால்நடைகளுக்கு உரிய முறையில் கணக்கெடுத்து இழப்பீடு வழங்க வேண்டும் என்றார் அவர்.

தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் எஸ்.ஏ.சின்னசாமி பேசியது:

கரும்புக்கு மத்திய அரசு வழங்கும் விலையில் ரூ.100 குறைத்து டன்னுக்கு ரூ.2,400 வழங்குவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது. இது விவசாயிகளுக்கு ஏமாற்றம் அளிக்கிறது. கர்நாடகம், உத்தரபிரதேசத்தில் வழங்குவதாக போல அறிவித்துள்ள விலையில் ரூ.200 தமிழக அரசு கூடுதலாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அவர்.

மேலும், வெள்ளாளப்பட்டி கூட்டுறவு கடன் சங்கத்தில் விவசாயிகள் பெற்ற சொட்டுநீர்ப் பாசனக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும்.

தருமபுரி உழவர் சந்தையை மேம்படுத்த வேண்டும். தென்பெண்ணை ஆற்றிலிருந்து எண்ணேகொல்புதூர் வழியாக தும்பலஅள்ளி அணைக்கு மழை நீரை கொண்டு வரும் திட்டத்தை செயல்படுத்த வேண்டும். நல்லம்பள்ளி வாரச் சந்தையில் நுழைவுக் கட்டணத்தை நிர்ணயித்த அளவு மட்டுமே வசூலிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை விவசாயிகள் வலியுறுத்தினர்.

கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராமர், வேளாண் இணை இயக்குநர் வேணுகோபால், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ஆர்.சுசிலா, முன்னோடி வங்கி மேலாளர் கலைமகள், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் முருகேசன் மற்றும் தோட்டக்கலைத் துறை அலுவலர்கள், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**முட்டை விற்பனையில் புதிய நடைமுறைக்கு  மொத்த வியாபாரிகள் எதிர்ப்பு**

முட்டை விற்பனையில் நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு (என்இசிசி) ஜனவரி 1 முதல் அமல்படுத்த உள்ள புதிய நடைமுறைக்கு கேரளம், தமிழக மொத்த வியாபாரிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

எனினும், சில்லறை விலையைக் குறைத்து முட்டை நுகர்வை அதிகரித்திட இந்தப் புதிய நடைமுறையைப் பின்பற்ற வேண்டியது அவசியம் என்று தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு தெரிவித்துள்ளது.

முட்டை வர்த்தகத்தில் இடைத்தரகர்களின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தி, பண்ணையாளர்களுக்கும், நுகர்வோர்களுக்கும் உரிய பலன் கிடைக்கச் செய்திட ஜனவரி 1-ஆம் தேதி முதல் என்இசிசி அறிவிக்கும் விலையிலேயே பண்ணைகளில் இருந்து முட்டை விற்பனை செய்யப்படும் என்றும், இந்த விலையில் இதுவரை பின்பற்றப்பட்டு வந்த வியாபாரக் கழிவுத்தொகை இனி ஒதுக்கப்படாது என்றும் நாமக்கல் மண்டல என்இசிசி அறிவித்துள்ளது.

தவிர, போக்குவரத்து, இதர செலவினங்களைக் கணக்கிட்டு, கடைகளுக்கு விநியோகிக்க என்இசிசி விலையிலிருந்து உயர்த்தி விற்க வேண்டிய சில்லறை விலையையும் ஊருக்குத் தகுந்தபடி என்இசிசியே நிர்ணயித்துள்ளது.

இந்தப் புதிய விலையைப் பின்பற்றிட பண்ணையாளர்களுக்கும், மொத்த வியாபாரிகளுக்கும் அறிவுறுத்துவதற்கான ஆலோசனைக் கூட்டம் நாமக்கல்லில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு நிர்வாகிகள் பேசியது: என்இசிசி விலையைப் பின்பற்றாமல், அதிலிருந்தும் குறைத்து முட்டையை விற்பனை செய்தால் பண்ணையாளர்களுக்கே பாதிப்பு ஏற்படக் கூடும். வியாபாரிகளுக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படப் போவதில்லை.

தவிர, முட்டை எளிதில் அழுகக் கூடியவை என்பதால், ஏற்றுமதியை எதிர்பார்த்து உற்பத்தியை அதிகரிக்கக் கூடாது. அப்படிச் செய்தால் ஏற்றுமதி வீழ்ச்சியடையும்பட்சத்தில் தேக்கத்தைத் தவிர்க்க உள்நாட்டு வர்த்தகத்தில் முட்டைகளை விலை குறைத்துக் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படும். இதனால், மீண்டும் வர்த்தகம் பாதிக்கப்படும். எனவே, என்இசிசி நிர்ணயிக்கும் விலையைப் பின்பற்றிடவும், முட்டை உற்பத்தியைக் கட்டுக்குள் வைத்திருக்கவும் வேண்டும் என்றனர்.

அப்போது முட்டை விலை நிர்ணயத்தில் புதிய நடைமுறைக்கு கேரளம், தமிழகத்தின் தென் மாவட்ட வியாபாரிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வாக்குவாதம் செய்தனர்.

அவர்கள் கூறியது: சில்லறை விற்பனைக்கானத் தொகையை ஊருக்குத் தகுந்தபடி என்இசிசியே அறிவிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. இதனால், வியாபாரிகளுக்கு பெருமளவில் நஷ்டம் ஏற்படக் கூடும். எனவே, முட்டை வர்த்தகத்தில் பழைய நடைமுறையைப் பின்பற்ற வேண்டும் அல்லது சில்லறை விற்பனை விலையை என்இசிசி நிர்ணயிக்காமல் இருக்கவும் வேண்டும் என்றனர்.

### குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் வெளிநடப்பு

கரும்பு விலையை உயர்த்த வலியுறுத்தி, தஞ்சாவூரில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் இருந்து பெரும்பாலான விவசாயிகள் வெளிநடப்பு செய்தனர்.

ஆட்சியரகத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன் தலைமை வகித்தார்.

கூட்டம் தொடங்கியவுடன் கரும்புகளுடன் வந்த விவசாயிகள் ஆட்சியரிடம் கரும்பு விலையை டன்னுக்கு 4,000 ரூபாயாக உயர்த்த வேண்டும் என வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பினர். பின்னர், வெளிநடப்பு செய்தனர்.

இதுகுறித்து தமிழக விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் ஆர். சுகுமாறன் தெரிவித்தது:

நிகழாண்டு கரும்பு விவசாயிகளுக்கு தமிழக அரசு துரோகம் செய்துவிட்டது. கரும்புக்கு மத்திய அரசு அறிவித்த விலையைவிட, தமிழக அரசு ரூ. 100 குறைத்து அறிவித்துள்ளது. எனவே, தமிழக அரசு கரும்பு விலையை மறுபரிசீலனை செய்து டன்னுக்கு குறைந்தபட்சம் ரூ. 3,500 என அறிவிக்க வேண்டும் என்றார்.

வெளிநடப்பு செய்த விவசாயிகளில் சிலர் சுமார் 15 நிமிஷங்கள் கழித்து மீண்டும் கூட்டத்துக்கு வந்தனர்.

அப்போது, தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் சாமி. நடராஜன் பேசியது:

கரும்புக்கான கொள்முதல் விலையாக மத்திய அரசு டன்னுக்கு ரூ. 2,100 என அறிவித்துள்ளது. தமிழக அரசு ஆதரவு விலையாக டன்னுக்கு ரூ. 550 என அறிவிப்பு வெளியிட்டுள்ளது. கடந்த ஆண்டு தமிழக அரசு டன்னுக்கு ரூ. 650 கொடுத்தது. இந்நிலையில், நிகழாண்டு ரூ. 100 குறைத்துள்ளது. உற்பத்தி செலவுகள் அதிகரித்துள்ள நிலையில், கடந்த ஆண்டைவிட நிகழாண்டு ரூ. 100 குறைவாக விலை அறிவிக்கப்பட்டுள்ளதை கண்டிக்கிறோம். மத்திய, மாநில அரசுகள் இணைந்து டன்னுக்கு ரூ. 4,000 என அறிவிக்க வேண்டும் என்றார்.

தஞ்சாவூர் மாவட்ட குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை கரும்பு உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் எஸ். ராமநாதன் பேசியது:

மத்திய அரசு கடந்த ஆண்டு கரும்புக்கு டன்னுக்கு ரூ. 1,700 எனவும், மாநில அரசு டன்னுக்கு ரூ. 650 என்றும் அறிவித்தன. நிகழாண்டு மத்திய அரசு டன்னுக்கு ரூ. 2,100 என்றும், மாநில அரசு டன்னுக்கு ரூ. 550 எனவும் அறிவித்துள்ளன. இது பெருத்த ஏமாற்றத்தை அளிக்கிறது. தமிழக அரசு கடந்த ஆண்டு விலையிலேயே ரூ. 100 குறைத்துவிட்டது. இதை அரசு உடனடியாக பரிசீலனை செய்து டன்னுக்கு ரூ. 4,000 என அறிவிக்க வேண்டும் என்றார்.

## 43,000 ஹெக்டேரில் பயறு வகை சாகுபடி செய்ய இலக்கு

தஞ்சாவூர் மாவட்டத்தில் நிகழ் பருவத்துக்கான பயறு வகைப் பயிர்கள் 43,000 ஹெக்டேரில் பயிரிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார் மாவட்ட வருவாய் அலுவலர் சீ. சுரேஷ்குமார்.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் அவர் மேலும் பேசியது:

மாவட்டத்தில் 2013-14 ஆம் ஆண்டு சம்பா பருவத்தில் 1,06,077 ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில், இதுவரை 262 ஹெக்டேரில் அறுவடைப் பணிகள் முடிவடைந்துள்ளன. ஹெக்டேருக்கு சராசரியாக 6,150 கிலோ நெல் மகசூல் கிடைக்கிறது.

தாளடி பருவத்தில் 22,588 ஹெக்டேர் பரப்பளவில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. மேலும், யூரியா 4,924 டன்களும், டி.ஏ.பி. 2,802 டன்களும், பொட்டாஷ் 5,906 டன்களும், கூட்டு உரங்கள் 3,818 டன்களும் அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலும், தனியார் விற்பனை நிலையங்களிலும் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது.

நிகழ் பருவத்துக்கான பயறு வகைப் பயிர்கள் சாகுபடி இலக்கு 43,000 ஹெக்டேர் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான சான்று பெற்ற ஆடுதுறை 3,

ஆடுதுறை 5, வம்பன் 3 ஆகிய ரக விதைகள் அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களிலும் 152 டன்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. விதை கிராமத் திட்டத்தின் கீழ், 50% மானிய விலையிலும், தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் (பயறு வகை) கீழ், கிலோவுக்கு ரூ. 20 மானியத்திலும் வழங்கப்படுகிறது.

மேலும், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டப் பயறு இயக்கத் திட்டத்தின் கீழ் இலைவழித் தெளிப்புக்கு 25 கிலோ டி.ஏ.பி. உரம் ஒரு ஹெக்டேருக்கு ரூ. 500 மானியத்தில் வழங்கப்படுகிறது.

தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், 50% மானிய விலையில் உயிர் உரங்கள், களைக்கொல்லி மருந்து, நுண்ணூட்டச்சத்து, உயிர் பூச்சிக்கொல்லி, தாவர பூச்சிக்கொல்லி மருந்துகள், பூச்சிக்கொல்லி மருந்துகள், மழை தூவான், நகரும் தெளிப்பான் உள்ளிட்டவை வழங்கப்படவுள்ளன. இந்தத் திட்டத்தின் கீழ் பயனடைய பயறு சாகுபடி செய்யும் விவசாயிகள் குடும்ப அட்டை நகல், சிட்டா அடங்கல் ஆகிய ஆவணங்களுடன் தங்களுடைய பகுதி வேளாண்மை உதவி இயக்குநரை அணுகலாம்.

மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 155 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் நிகழ் காரீப் பருவத்தில் இதுவரை 48,345 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையில் 2013-14 ஆம் ஆண்டு அரவை அக். 4-ம் தேதி தொடங்கப்பட்டது. டிச. 20-ம் தேதி வரை 1,71,173 டன்கள் அரவை செய்யப்பட்டுள்ளது. ஆலையின் சராசரி சர்க்கரை கட்டுமானம் 8.03 சதவீதமாக உள்ளது.

டிச. 15-ம் தேதி வரை அரவை செய்யப்பட்ட 1,58,403 டன் கரும்பு விநியோகம் செய்த விவசாயிகளுக்கு கிரையத் தொகை ரூ. 35.64 கோடி வழங்கப்பட்டுள்ளது என்றார் சுரேஷ்குமார்.

### பிப்ரவரி வரை மேட்டூரிலிருந்து தண்ணீர் திறந்துவிட வலியுறுத்தல்

சம்பா சாகுபடிக்காக மேட்டூர் அணையிலிருந்து பிப்ரவரி மாதம் வரை தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர்.

கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன் தலைமை வகித்தார். இதில் விவசாயிகள் பேசியது:

தென்னங்குடி பழனிமாணிக்கம்: பயிர் காப்பீடு செய்யப்பட்டதற்கான இழப்பீட்டுத் தொகை இன்னும் வரவில்லை. பொங்கல் பண்டிகை வரவுள்ளதால் செலவுக்குப் பணம் தேவைப்படுகிறது. எனவே, இழப்பீட்டுத் தொகை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆம்பலாப்பட்டு அ. தங்கவேல்: கல்லணைக் கால்வாயின் சி.எம்.பி. வடகாடு வாய்க்காலில் கடைமடைப் பகுதிக்குத் தண்ணீர் வராததால், நிகழாண்டு அப்பகுதி முழுவதும் தரிசாகக் கிடக்கிறது. இதனால், விவசாயிகள் மிகுந்த பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர். எனவே, அவர்களுக்கு ஏக்கருக்கு ரூ. 20,000 வீதம் நிவாரணம் வழங்க வேண்டும்

எஸ்.புதூர் ஆர். யுவராஜ்: கும்பகோணம் அருகேயுள்ள நரசிங்கம்பேட்டையில் மீத்தேன் வாயு எடுப்பதற்காக வியாழக்கிழமை ஓ.என்.ஜி.சி. நிறுவனத்தினர் நிலத்தைத் தோண்டினர். அப்பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால், வட்டாட்சியர் அப்பகுதிக்கு வந்து தோண்டும் பணிக்குத் தடை விதித்தார்.

இதையடுத்து, அப்பணியும் நிறுத்தப்பட்டது. அந்நிறுவனத்தினர் மீண்டும் வந்தால் என்ன செய்வது?

ஆட்சியர்: இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

பொன்னவராயன்கோட்டை வா. வீரசேனன்: மேட்டூர் அணையிலிருந்து பாசனத்துக்காகத் திறந்துவிடப்படும் தண்ணீர் ஜன. 28-ம் தேதியுடன் மூடப்படும் எனக் கூறப்படுகிறது. அவ்வாறு மூடப்பட்டால் எங்களது பகுதியில் சாகுபடி

செய்ய முடியாமல் போய்விடும். எனவே, மேலும் 15 நாள்களுக்குத் தொடர்ந்து தண்ணீர் விட வேண்டும். மதுக்கூர் ஒன்றிய விவசாயிகள் சங்கத் தலைவர் ஏ.பி. சந்திரன்: நெல் சாகுபடியில் செலவு அதிகரித்துவிட்டது. இந்தச் சுமைகளை எல்லாம் விவசாயிகள்தான் சுமக்க வேண்டும். எனவே, நெல்லுக்கான விலையை குவிண்டாலுக்கு ரூ. 2,500 என அரசு அறிவிக்க வேண்டும்.

புனல்வாசல் வி.ஏ. சவரிமுத்து: தென்னை மரங்களில் தேங்காய்களைப் பறிக்கவும், அவற்றை மட்டை நீக்கி உறிக்கவும் கூலி ஆள்கள் கிடைப்பதில்லை. எனவே, தென்னை சாகுபடியாளர்களுக்குத் தேங்காய்களைப் பறிப்பதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால், சாகுபடியாளர்கள் பெருத்த சேதமும், நஷ்டமும் அடைந்து வருகின்றனர். எனவே, தென்னை விவசாயிகளைக் காப்பாற்ற ஆள் தூக்கி இயந்திரத்தைக் கொண்டு தேங்காய்களைப் பறிக்கவும், உறிப்பதற்கான இயந்திரங்களையும் வேளாண்மைத் துறை மூலமாக வாடகைக்குவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## டெல்டா வேளாண்மை பாதுகாப்புக்கு சிறப்பு திட்டம் அறிவிக்க வேண்டும்

காவிரி டெல்டா மாவட்டங்களின் விவசாயத்தை பாதுகாக்க சிறப்பு பெருந்திட்டத்தை அரசு அறிவிக்க வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்க நாகை மாவட்ட மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க நாகை மாவட்ட 23-வது மாநாடு, சீர்காழியில் புதன்கிழமை நடைபெற்றது.

சங்க நிர்வாகிகள் சிவகுருபாண்டியன், கே.எஸ். சிவராமன் ஆகியோர் தலைமை வகித்தனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நாகை மாவட்டச் செயலர் எம். செல்வராசு மாநாட்டைத் தொடங்கிவைத்துப் பேசினார்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலத் தலைவரும், சிவகங்கை தொகுதி சட்டப்பேரவை உறுப்பினருமான எஸ். குணசேகரன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டார்.

மாநிலத் துணைச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டத் துணைச் செயலர் அ. சீனிவாசன் ஆகியோர் பேசினர்.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

கோமாரி நோய் தாக்குதலால் உயிரிழந்த கால்நடைகளுக்கு சந்தை விலை மதிப்பில் முழு நிவாரணம் வழங்க வேண்டும். மயிலாடுதுறை - தரங்கம்பாடி ரயில் பாதை திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். 2012-ம் ஆண்டுக்கான பயிர்க் காப்பீடு இழப்பீட்டுத் தொகையை உடனடியாக வழங்க வேண்டும்.

காவிரியில் தமிழகத்தின் உரிமையை மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும். வறட்சியால் பாதிக்கப்பட்ட வேதாரண்யம மானாவாரி நெல் பயிர் விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும்.

காவிரி டெல்டாவின் வேளாண்மையைப் பாதுகாக்கும் வகையில் சிறப்புப் பெருந்திட்டத்தை அறிவிக்க வேண்டும். ஆற்று முகத்துவாரங்களில் கதவணைகள் அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

புதிய நிர்வாகிகள் தேர்வு:  தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்டத் தலைவராக பி. வீரராஜ், செயலாளராக எஸ். சம்பந்தம், துணைத் தலைவர்களாக பி. பொன்னுசாமி, எஸ். நாராயணசாமி, துணைச் செயலாளர்களாக சிவராமன், சீனிவாசன், பொருளாளராக மு. செல்லப்பன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## வேதாரண்யத்தை வறட்சி பாதித்த பகுதியாக அறிவிக்க வேண்டும்

வேதாரண்யம் பகுதியை வறட்சியால் பாதித்த பகுதியாக அறிவிக்க வேண்டும் என தமிழக அரசை வலியுறுத்தி ஊராட்சி ஒன்றியக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வேதாரண்யம் ஊராட்சி ஒன்றிய குழுக் கூட்டம் அதன் தலைவர் சுசிலாதேவி சரவணன் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில் உறுப்பினர்கள் பேசியது:

எம். ராஜசேகரன் (அதிமுக): வேதாரண்யம் பகுதியில் வறட்சி காரணமாக சம்பா பயிர்கள் கருவிட்டன. மல்லிகை உள்ளிட்ட தோட்டக்கலை பயிர்களும் பாதிப்படைந்து வருகிறது. குளம் குட்டைகளில் தண்ணீர் இல்லை. எனவே, பாதிப்புகளுக்கு நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

என். சந்திரசேகரன் (காங்): வறட்சியால் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், கால்நடைகள் கோமாரி நோய் தாக்குதலால் உயிரிழந்துள்ளன. வாய்மேடு, ஆயக்காரன்புலம் கால்நடை மருந்தகங்களில் மருத்துவர்களும் இல்லை, நோய்த் தடுப்புக்கான மருந்தும் இருப்பு இல்லை. தகட்டூர் கே.சுப்பிரமணியன் (அதிமுக): நிலத்தடி நீர்வளம் வெகுவாக பாதித்து வருவதை கருத்தில் கொண்டு குடிநீர் பிரச்னையை சமாளிக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

க. முருகேசன் (திமுக): தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களுக்கு பசுமை வீடு, இந்திரா தொகுப்பு வீடுகள் 30 சதவீதம் ஒதுக்கப்படுகிறது. பொருளாதார வசதி இல்லாமல் சில இடங்களில் பயனாளிகள் பயன் அடைய முடிவதில்லை. எனவே, பயனாளிகளே கட்ட வேண்டும் என்ற நிலையை மாற்றி ஒப்பந்ததாரர்கள் மூலம் கட்டிக் கொடுக்க வேண்டும். அசோக்குமார் (திமுக): எனது தொகுதியில் நிலவும் மின்கம்பம், சாலை போன்ற அடிப்படை பிரச்னைகளை தொடர்ந்து பேசியும் தீர்வு கிடைக்கவில்லை. கூட்டத்தில், வறட்சி பாதிப்பு குறித்து நாகை மாவட்ட ஆட்சியரை சனிக்கிழமை சந்தித்து ஒன்றியக் குழு உறுப்பினர்கள் அனைவரும் மனு அளிப்பது என முடிவு செய்யப்பட்டது. முன்னதாக, மாவட்ட ஊராட்சியின் முன்னாள் துணைத் தலைவர் செ. யூசுப் மறைவுக்கு கூட்டத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

## வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு இழப்பீடு

வறட்சியால் பாதிக்கப்பட்ட மானாவாரி பயிர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. நாகை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், ஆட்சியரகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. ஆட்சியர் து. முனுசாமி தலைமை வகித்தார்.

மயிலாடுதுறை சார் ஆட்சியர் திவ்யதர்ஷினி, நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் எம். ராதாகிருஷ்ணன், வேளாண் இணை இயக்குநர் (பொறுப்பு) ரா. ரவீந்திரன், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் ஞா. ஜெயராஜ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) செல்வின் துரை, கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி மேலாண் இயக்குநர் பால்வடிவு மற்றும் முன்னோடி விவசாயிகள், விவசாய சங்கங்களின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்திய கோரிக்கைகள்:

நிகழாண்டில் ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக, நாகை மாவட்டம், வேதாரண்யம் பகுதியில் சுமார் 15 ஆயிரம் ஹெக்டேரில் பயிரிடப்பட்டிருந்த மானாவாரி நெல் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதுகுறித்து உரிய ஆய்வு மேற்கொண்டு, முழுமையான இழப்பீடு வழங்க அரசுக்குப் பரிந்துரைக்க வேண்டும் என வேதாரண்யம் பகுதி விவசாயிகள் வலியுறுத்தினர்.

மஞ்சள் நோய், மாவு நோய், சூறை நோய் உள்ளிட்டவைகளால் கீழ்வேளூர் வட்டாரத்தில் நெல் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக, தற்போது கடுமையான மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ளது. விவசாயிகளின் நஷ்டத்தை ஈடு செய்யும் வகையில் இழப்பீடு வழங்க வேண்டும் என கீழ்வேளூர் விவசாயிகள் வலியுறுத்தினர்.

கடந்த ஆண்டுக்கான பயிர்க் காப்பீடு இழப்பீட்டுத் தொகையில் மத்திய அரசும், பயிர்க் காப்பீட்டு நிறுவனமும் தங்கள் பங்களிப்பத் தொகையை விடுவித்துள்ள நிலையில், தமிழக அரசு வரும் பொங்கல் பண்டிகைக்குள் விவசாயிகளுக்குப் பயிர்க் காப்பீடு இழப்பீட்டுத் தொகை கிடைக்கும் வகையில், பயிர்க் காப்பீட்டுத் தொகை பங்களிப்பை வழங்க வேண்டும் என பல்வேறு பகுதி விவசாயிகள் வலியுறுத்தினர். ஆட்சியர் பேசியது: நிகழாண்டில் நாகை மாவட்டத்தில் 1.02 லட்சம் ஹெக்டேரில் சம்பா நெல் பயிர்களும், 32,500 ஹெக்டேரில் தாளடி நெல் சாகுபடியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிகழ் சம்பா பருவத்தில் இதுவரை 7,300 ஹெக்டேரில் அறுவடை முடிந்துள்ளது. நெல் கொள்முதலுக்காக நாகை மாவட்டத்தில் இதுவரை 190 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்

திறக்கப்பட்டுள்ளன. விவசாயிகளின் நலன் கருதி ஈரப்பத சதவீதம் 17-லிருந்து 20-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. தேவைக்கேற்ப நெல் கொள்முதல் நிலையங்களின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்படும். விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற உரிய நடவடிக்கைகளை மாவட்ட நிர்வாகம் விரைவாக மேற்கொள்ளும் என்றார் ஆட்சியர்.

**மானாவாரி விவசாயிகள் சங்கக் கூட்டம்**

நாகை மாவட்டம், வேதாரண்யம் வட்ட மானாவாரி விவசாயிகள் சங்கத்தின் கூட்டம் அதன் தலைவர் கே. லெட்சுமணன் தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது. வேதாரண்யம் பகுதியில் நிலவும் வறட்சியால், சுமார் 24 ஆயிரம் ஏக்கர் மானாவாரி நிலங்களில் சம்பா நெல் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளதைக் கணக்கிட்டு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என தமிழக அரசை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**"விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் இருப்பு உள்ளது**

பெரம்பலூர் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் இருப்பு உள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது. பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் வியாழக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு விளக்கம் அளித்து அவர் மேலும் பேசியது:

பெரம்பலூர் மாவட்டத்தில் டிச. 2013 வரை 811.16 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. இது, சராசரி மழை அளவை விட 50 மில்லி மீட்டர் குறைவாகும். மாவட்டத்தில் நெல் 4,732 ஹெக்டேரிலும், பயறுவகை 1,239 ஹெக்டேரிலும், கரும்பு 4,604 ஹெக்டேரிலும், தானியப் பயிர்கள் 49,312 ஹெக்டேரிலும், பருத்தி 31,116 ஹெக்டேரிலும், எண்ணெய் வித்துப் பயிர்கள் 1,048 ஹெக்டேரிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மைத் துறையில் நெல் 6.1 மெட்ரிக் டன், நிலக்கடலை 39 மெட்ரிக் டன் மற்றும் பயறு வகை பயிர்கள் 7.5 மெட்ரிக் டன் விதைகள், வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

மேலும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் தனியார் விற்பனை மையங்களில் தேவையான உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது.

கூட்டத்தில், விவசாயிகள் கூறிய கோரிக்கைகள் பாசீலிக்கப்பட்டு, முறையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார் தரேஸ் அஹமது.

கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் எம்.ஏ. சுப்பிரமணியன், வேளாண்மை இணை இயக்குநர் வே. அழகிரிசாமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) இரா. கனகசபை உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**"குமரி மாவட்டத்தில் தேன் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை'**

குமரி மாவட்டத்தில் தேன் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக காதி மற்றும் கிராம தொழில்துறை அமைச்சர் டி.பி. பூனாட்சி தெரிவித்தார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் காதி மற்றும் கிராம தொழில்துறை அலுவலக பணிகளை ஆய்வு செய்வதற்காக அத்துறை அமைச்சர் டி.பி.பூனாட்சி வெள்ளிக்கிழமை நாகர்கோவில் வந்தார். அவரை மாவட்ட ஆட்சியர் எஸ். நாகராஜன் வரவேற்றார். பின் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கே.டி.பச்சைமால் தலைமையில் அமைச்சர் பூனாட்சி ஆய்வுப் பணிகளை மேற்கொண்டார்.

நாகர்கோவில் கோட்டாறு சவேரியார் ஆலயம் அருகே உள்ள கதர் கிராம தொழில் உதவி இயக்குநர் அலுவலகத்திற்குச் சென்று அலுவலகப் பணிகளை அமைச்சர் ஆய்வு செய்து பேசியது:

குமரி மாவட்டத்தில் கிராமப் பொருள்கள் ரூ107.20 லட்சத்திற்கு விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அதில் நவம்பர் 2013 முடிய ரூ.92.85 லட்சத்திற்கு பொருள்கள் விற்பனையாகி 87 சதவிகித இலக்கை எட்டியுள்ளது.

கதர் பொருள்களுக்கு ரூ.1 கோடி விற்பனை இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அதில் நவம்பர் 2013 முடிய ரூ.76.55 லட்சத்திற்கு விற்பனையாகி 77 சதவீகித இலக்கைப் பெற்றுள்ளது. 2013-14- ஆம் ஆண்டில் கதர் இருப்பு ரூ. 36.78 லட்சமும், பட்டு இருப்பு ரூ.25.36 லட்சமும், பாலியெஸ்டர் இருப்பு ரூ.9.09 லட்சம் என மொத்தம் ரூ.71.23 லட்சம் உள்ளது. அதே போல் கதர் நூல் உற்பத்தியில் நவம்பர் 2013 முடிய ரூ.4.33 லட்சம் அளவுக்கு உற்பத்தி இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அதில் ரூ. 3.21 லட்சம் அளவு உற்பத்தி செய்யப்பட்டு துணி உற்பத்தியில் 75 சதவீகிதம் முன்னேற்றம் அடைந்துள்ளது. குமரி மாவட்டத்தில் தேன் உற்பத்தி அதிகளவு உள்ளது. இங்கிருந்து பல்வேறு மாநிலங்களுக்கு தேன் ஏற்றுமதி செய்யப்படுகிறது. தேன் உற்பத்தியை அதிகரிக்கவும், விற்பனையைப் பெருக்கவும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என தெரிவித்தார். பின் மைலாடி பேருராட்சி பகுதியில் அமைந்துள்ள கதர் கிராம தொழில்களின் குளியல் சோப்பு உற்பத்தி செய்யும் அலகு, அவை செயல்படும் விதம் மற்றும் பணிகளை அமைச்சர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து மார்த்தாண்டத்தில் இத் துறையின் கீழ் உள்ள தேனீ வளர்ப்போர் கூட்டுறவு சங்கத்திற்குச் சென்று, அங்கு தேன் பதப்படுத்தும் முறைகள், அதை விற்பனைக்காக தயார் செய்யும் பணிகளை அமைச்சர் ஆய்வு செய்தார்.ஆய்வின்போது கதர் கிராமத் தொழில் துறை தலைமை செயல் அலுவலர் பாலசந்தர்,சார் ஆட்சியர் சங்கர்லால் குமாவத், மதுரை மண்டலத் துணை இயக்குநர் அகஸ்டின் பீட்டர், உதவி இயக்குநர் அருணாச்சலம், பி.ஆர்.ஒ. இரா.அண்ணா, பத்மநாபபுரம் வருவாய் கோட்டாசியர் அருண் சத்யா, மாநில கூட்டுறவு இணையத் தலைவர் ஜான்தங்கம், பத்மநாபபுரம் நகராட்சித் தலைவர் சத்யாதேவி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### மீன் உணவு தயாரிப்பு பயிற்சி முகாம்: 31-க்குள் பெயர் பதிவு செய்யலாம்

தூத்துக்குடியில் ஜன. 8-ல் நடைபெறவுள்ள மீன் உணவு தயாரிப்பு பயிற்சி முகாமுக்கு இம் மாதம் 31-க்குள் பெயர்பதிவு செய்யலாம்.இதுகுறித்து மீன்வளக் கல்லூரி முதல்வர் சுகுமார் வெளியிட்ட செய்திக்குறிப்பு: தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமான தூத்துக்குடி மீன்வளக் கல்லுரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் வளர்ப்பு மீன்களின் உணவு மற்றும் மேலாண்மை பற்றிய பயிற்சி முகாம் ஜன. 8-ல் நடைபெறுகிறது.தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இயங்கும் மீன் உணவு தரக்கண்காணிப்பு ஆய்வகம் அமைத்தல் என்ற ஆராய்ச்சி திட்டத்தின்கீழ் நடைபெறவுள்ள இம் முகாமில், மீன்களுக்கான செயற்கை உணவு தயாரிப்பது, உணவு மேலாண்மை பற்றிய விளக்கவுரை, செயல்முறை விளக்கம் அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.முகாமில் கெண்டை மீன் வளர்ப்போர், அலங்கார மீன் வளர்ப்போர், இறால் வளர்ப்போர், மீன்களுக்கான உணவு தயாரிப்பில் விருப்பமுள்ளோர் பங்கேற்கலாம். இம் மாதம் 31-க்குள் 9443002467 என்ற செல்போன் எண்ணில் தொடர்பு கொண்டு பெயர்ப் பதிவு செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### "விவசாயக் கடனுதவிக்கு வங்கிகள் முன்னுரிமை அளிக்க வேண்டும்

கர்நாடகத்தில் விவசாயக் கடனுதவி அளிக்க வங்கிகள் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று, அந்த மாநில அரசுத் தலைமைச் செயலாளர் கௌசிக் முகர்ஜி கேட்டுக் கொண்டார்.பெங்களூரு விதான செய்தாவில் நபார்டு வங்கி சார்பில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற கருத்தரங்கில் அவர் பேசியது:மாநிலத்தில் விவசாயிகள் பல்வேறு பிரச்னைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு மாநில அரசு மானியங்கள் வழங்கி வருகிறது. விவசாயம் வளர்ச்சி பெற, தேசிய வங்கிகள் விவசாயிகளுக்கு பயிர்க் கடன்களை வழங்க வேண்டும். வங்கிகள் தங்களது மொத்த கடனில் 40 சதத்தை விவசாயத்திற்கு வழங்க வேண்டும். இதுவரை மாநிலத்தில் 37.42 சதம் கடன் விவசாயத்திற்கு வழங்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது. தேசிய வங்கிகள் விவசாயக் கடனுதவிக்கான விதிகளை தளர்த்த வேண்டும் என்றார் அவர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கடுமையான பனிப்பொழிவால்குண்டு மல்லி உற்பத்தி பாதிப்பு



சென்னை: கடுமையான பனிப்பொழிவு காரணமாக, தமிழகத்தில், குண்டு மல்லி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் மற்றும் அதன் சுற்றுப் பகுதியில், நூற்றுக்கணக்கான விவசாயிகள், குண்டு மல்லி சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர்.

இப்பகுதிகளில், 700 ஹெக்டேர் பரப்பளவில், குண்டு மல்லி சாகுபடி நடைபெறுகிறது. நடப்பு டிசம்பர் மாதத்தில், கடுமையான பனிப்பொழிவால், குண்டுமல்லி உற்பத்தி பாதிக்கப் பட்டுள்ளது. குறிப்பாக, மலைப்பகுதிகளில், உறைபனி காரணமாக, குண்டு மல்லி, மொட்டாக இருக்கும் போதே கருகி விடுகிறது.

இதனால், தாண்டம்பாளையம், புதுகொய்னூர், கொத்தமங்கலம், வடவல்லி, கெஞ்சனூர், சிக்கரசம்பாளையம் பகுதிகளில், குண்டு மல்லி சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் கடுமையான இழப்பை சந்தித்துள்ளனர்.

குண்டு மல்லி உற்பத்தி குறைவால், சத்தியமங்கலம் சந்தையில், அதன் வரத்து, 30 டன்னில் இருந்து, 1 – 2 டன் என்ற அளவில், வீழ்ச்சி கண்டுள்ளது.அதே சமயம்,

சந்தைக்கு வரும் சிறிய அளவிலான குண்டு மல்லியின் தரம் நன்கு உள்ளதால், அதன் விலை, அதிக வேறுபாடின்றி, கிலோ, 300 ரூபாயாக உள்ளது என, வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

குண்டு மல்லிக்கு புகழ் பெற்ற சத்தியமங்கலம் சந்தைக்கு, ஈரோடு, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் இருந்து ஏராளமான வியாபாரிகள் வருவர்.அதுபோன்று, கர்நாடகா மாநிலத்தின், பெங்களூரு, மைசூர், சாம்ராஜ்நகர் ஆகியபகுதிகளை சேர்ந்த வியாபாரிகளும், சத்தியமங்கலம் சந்தையில், குண்டு மல்லி வாங்க வருவது வழக்கம்.

தற்போது, குண்டு மல்லி வரத்து குறைந்துள்ளதால், அவற்றை கொள்முதல் செய்ய வரும் வியாபாரிகளின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது.வரும்,2014 பிப்ரவரி வரை, குண்டு மல்லி உற்பத்தியும், வரத்தும் குறைவாகவே இருக்கும் என,சந்தையாளர்கள் தெரிவித்தனர்.

**வெங்காயத்திற்கான ஏற்றுமதி விலை 150 டாலராக குறைப்பு**



புதுடில்லி: மத்திய அரசு, விவசாயிகளின் நலன் கருதி, ஏற்றுமதிக்கான, 1 டன் வெங்காயத்தின் விலையை, 150 டாலராக மேலும் குறைத்துள்ளது. கடந்த சில மாதங்களுக்கு முன், வெங்காயம் உற்பத்தி குறைந்ததால், உள்நாட்டில் ஒரு கிலோ வெங்காயத்தின் விலை, 100 ரூபாய் வரை சென்றது. இதை கட்டுக்குள் கொண்டு வரும் வகையில், மத்திய அரசு, 1 டன் வெங்காயம் ஏற்றுமதிக்கான விலையை, 1,150 டாலராக உயர்த்தியது. இதற்கும் குறைவான விலைக்கு, வெங்காயத்தை ஏற்றுமதி செய்ய முடியாது.

இந்நிலையில் கடந்த ஒரு சில வாரங்களாக, மகாராஷ்டிரா, குஜராத், ராஜஸ்தான், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வெங்காயம் உற்பத்தி அதிகரித்து, சந்தைகளுக்கு இதன் வரத்து உயர்ந்து வருகிறது. இதன் காரணமாக, மகாராஷ்டிரா மாநிலம், லசல்கான் மொத்த விலை சந்தையில், ஒரு கிலோ வெங்காயத்தின் விலை, 10 ரூபாய்க்கும் கீழ் சரிவடைந்தது. இதையடுத்து, விவசாயிகளும், வர்த்தகர்களும் போராட்டம் நடத்தினர்.

மத்திய அரசு, இதன் ஏற்றுமதியை அதிகரிக்கும் வகையில், கடந்த இரு வாரங்களில், ஏற்றுமதிக்கான, 1 டன் வெங்காயத்தின் விலையை, 800 டாலர் மற்றும் 350 டாலராக குறைத்தது. இரு தினங்களுக்கு முன், மத்திய வேளாண் அமைச்சர் சரத்பவார், வெங்காயம் ஏற்றுமதிக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை முற்றிலுமாக நீக்க வேண்டும் என, கோரிக்கை விடுத்திருந்தார். இதை பரிசீலித்த மத்திய வர்த்தக அமைச்சகம், ஏற்றுமதிக்கான, 1 டன் வெங்காயத்தின் விலையை, 150 டாலராக குறைத்துள்ளது.

**தக்காளி விலை வீழ்ச்சி விவசாயிகள் கவலை**

நகரி: வெளிமாநிலங்களுக்கு தக்காளி ஏற்றுமதி இல்லாததால், சித்துார் மாவட்டத்தில், தக்காளி விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.ஆந்திர மாநிலம், சித்துார் மாவட்டம், கார்வேட்நகரம், நகரி, மதனப்பள்ளி, பலமநேர், புங்கனுார் உட்பட, 60க்கும் மேற்பட்ட கிராமங்களில், விவசாயிகள், தக்காளி அதிகளவில் பயிரிட்டு உள்ளனர். தமிழகத்தில், தக்காளி விலை அதிகம் என்பதால், பெரும்பாலான ஆந்திர மாநில விவசாயிகள், தக்காளி தோட்டம் அமைத்திருந்தனர்.

அங்கு விளையும் தக்காளி, மதனப்பள்ளி காய்கறி மார்க்கெட்டிற்கு கொண்டு வந்து, அங்கிருந்து, மும்பை, ஐதராபாத் மற்றும் சென்னை ஆகிய இடங்களுக்கு அனுப்பப்படுகிறது. கடந்த, மூன்று மாதத்திற்கு முன், ஒரு கிலோ, தக்காளி, 40 - 50 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது, வரத்து அதிகரித்துள்ளதாலும், மேற்கண்ட வெளியூர்களுக்கு தக்காளி அனுப்பாததால், தக்காளி குவிந்து கிடக்கிறது.நேற்று முன்தினம், மதனப்பள்ளி மார்க்கெட்டில், ஒரு கிலோ தக்காளி,

முதல் ரகம், ஆறு ரூபாய்க்கு, இரண்டாவது ரகம், நான்கு ரூபாய்க்கும், மூன்றாவது ரகம், மூன்று ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது.மேலும், நகரியில், ஆறு - ஏழு ரூபாய் வரை, ஒரு கிலோ தக்காளி விற்பனை செய்யப்படுகிறது.தக்காளி விலை கடும் வீழ்ச்சியால், விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

**நெல் வயலில் எலியை ஒழிக்கமின்சாரத்தை பாய்ச்சும் ஆபத்து**

வானூர் :வானூர் பகுதியில் நெற் பயிரை அழிக்கும் எலியை கொல்வதற்கு, வயலில் மின்சாரம் பாய்ச்சுவதால் மனிதர்கள் உயிரிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.
விழுப்புரம் மாவட்டம், வானூர் ஒன்றியம் கொஞ்சிமங்கலம், எடச்சேரி பகுதியில் அதிகளவில் நெல் சாகுபடி செய்துள்ளனர். தற்போது பயிர்கள் வளர்ந்து கதிர் வரும் நிலையில் உள்ளது. இந்த ஆண்டு மழை இல்லாததால் எலிகள் பெருக்கம் அதிகரித்துள்ளது.இவை பயிரை நாசம் செய்வதால் விவசாயிகள், எலி தொல்லையை கட்டுப்படுத்த முடியமால் தவித்து வருகின்றனர். இதனால் ஒரு சில விவசாயிகள் நெல் பயிரை பாதுகாக்க, இரவு நேரங்களில் இரும்பு கம்பி மூலம் மின்சாரம் பாய்ச்சுகின்றனர். இதனால் இரவு நேரத்தில் உணவு உண்ணும் விலங்குகள் மின்சார தாக்குதலில் சிக்கி இறக்கின்றன.
குடியிருப்பு பகுதி அருகில் அனுமதியின்றி வயலில் மின்சாரம் வைப்பதால், தவறுதலாக பொதுமக்கள் மீது மின்சாரம் பாய்ந்து உயிரிழக்கும் ஆபத்தும் உள்ளது. அதிகாரிகள் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**விவசாயிகளுக்கு நல்ல விலை வழங்காவிட்டால்...அபாயம்!தேயிலை தோட்டங்கள் விற்பனை அதிகரிக்கும்..**

ஊட்டி :""தரமான பசுந்தேயிலையைவழங்கும் விவசாயிகளுக்கு, தொழிற்சாலைகள் நல்ல விலை வழங்காவிட்டால், தேயிலை தோட்டங்கள் விற்பனைஅதிகரிக்கும் நிலை உருவாகும்," என, தேயிலை சுற்றுலாவிழாவில் அறிவுறுத்தப்பட்டது.நீலகிரி மாவட்ட சுற்றுலா துறை, தேயிலை வாரியம், நீலகிரி மாவட்ட நிர்வாகம் சார்பில், "நீலகிரி தேயிலை சுற்றுலா விழா 2013', ஊட்டி எச்.ஏ.டி.பி., திறந்த வெளி மைதானத்தில், நேற்று துவங்கியது. மாவட்ட வருவாய் அலுவலர் பாஸ்கர பாண்டியன் வரவேற்றார். மாவட்ட கலெக்டர் சங்கர் தலைமை வகித்தார்.
தரமே நிரந்தரம்தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன்

பேசியதாவது: கடந்த நான்கு மாதமாக, தேயிலை வர்த்தகம் ஸ்தம்பித்த நிலையிலும், விவசாயிகளுக்கு கட்டுபடியாகும் விலை கிடைத்து வருகிறது. மாவட்டத்தில், 120 விவசாய சங்கங்கள் உள்ளன; அதில், 40 சங்கங்கள் மிகச் சிறப்பாக செயல்படுகின்றன; ஒரு கிலோ பசுந்தேயிலைக்கு 16- 20 ரூபாய் வரை விலை பெறுகின்றனர்.விவசாயிகள், தொழிற்சாலைகள் ஒருங்கிணைந்து செயல்பட்டால் மட்டுமே, தொழில் சிறப்பாக இருக்கும். தரமான பசுந்தேயிலையை வழங்கும் விவசாயிகளை தொழிற்சாலைகள் தத்தெடுத்து, அவர்களது பசுந்தேயிலைக்கு நல்ல விலை வழங்க வேண்டும். அவ்வாறு செய்தால் தான், விவசாயிகள் தொடர்ந்து தேயிலை சாகுபடி செய்வர்; தவறும்பட்சத்தில், அவர்கள் தங்கள் தோட்டங்கள் அதிகளவில் விற்பனையாகும் அபாயம் உள்ளது; இதனால், வருங்காலங்களில், தேயிலை தூள் தயாரிக்க பசுந்தேயிலை கிடைப்பது அரிதாகி விடும். விவசாயிகளின் பசுந்தேயிலைக்கு குறிப்பிட்ட ஒரு தனியார் தேயிலை தொழிற்சாலை விலை நிர்ணயம் செய்த நிலை மாறி, "இன்கோ' தொழிற்சாலைகளின் விலை நிர்ணயத்தை, தனியார் தொழிற் சாலைகள் பின்பற்றும் அளவுக்கு, "இன்கோ' தொழிற்சாலைகள் முன்னேறியுள்ளன.இவ்வாறு, அம்பலவாணன் பேசினார்.

அரசு விழாவில் அரசியல் வாடைஊட்டி எம்.எல்.ஏ., புத்திச்சந்திரன் பேசுகையில்,""தி.மு.க, ஆட்சியில் தேயிலை விவசாயிகளுக்கு பல இன்னல்களும், அ.தி.மு.க., ஆட்சியில், அதற்கான தீர்வுகளும் கிடைப்பது, வாடிக்கையாகி விட்டது," என்றார்.ஊட்டி நகராட்சி தலைவி சத்தியபாமா பேசுகையில்,""ஊட்டியை மாதிரி நகரமாக மாற்ற, ஆசிய மேம்பாட்டு வளர்ச்சி நிதி மூலம் 30.72 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில், நவீன கழிப்பறை, தெரு விளக்கு உட்பட பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன," என்றார். நகராட்சி துணைத் தலைவர் கோபாலகிருஷ்ணன் பேசுகையில்,""கலப்பட தேயிலையை ஒழிக்க தேயிலை வாரிய அதிகாரிகள் தொடர் முயற்சி எடுப்பதால், தரமான தேயிலை உற்பத்தி அதிகரித்து வருகிறது" என்றார்.

கலகலப்பில் அரங்கு:தொடர்ந்து, பரத நாட்டியம், படுகர், பழங்குடியின மக்களின் பாரம்பரிய நடனம், இன்னிசை கச்சேரி போன்றவை நடந்தன.நிகழ்ச்சியில், ஊட்டி

ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் சாந்தி, துணைத் தலைவர் மோகன், நீலகிரி கூட்டுறவு நிறுவன தலைவர் வினோத், என்.சி.எம்.எஸ்., தலைவர் கண்ணபிரான் உட்பட பலர் பங்கேற்றனர். நீலகிரி மாவட்ட சுற்றுலா அலுவலர் துரைராஜ் நன்றி கூறினார்.நிகழ்ச்சியில், தோட்டக்கலை துறை, டான் டீ, தேயிலை வாரியம், இன்கோ சர்வ் மற்றும் தனியார் தேயிலை தொழிற்சாலைகளின் காட்சி அரங்குகள் இடம் பெற்றிருந்தன. இன்றும், நாளையும், தேயிலை தொடர்பான போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் உட்பட பல நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளன.

**சொட்டுநீர் பாசன விவசாயிகளுக்கு வெள்ளை பொட்டாஷ் உரம் சப்ளை**

தேனி": தேனி மாவட்டத்தில், சொட்டுநீர் பாசனத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு நீரில் கரையும் தன்மையுள்ள வெள்ளை பொட்டாஷ் உரம் சப்ளை செய்யப்படுகிறது. சிவப்பு நிறத்தில் உள்ள சாதாரண ரக பொட்டாஷ் உரங்கள் நீரில் உடனே கரையாது. இந்த உரத்தை பயன்படுத்தும் சொட்டுநீர் பாசன விவசாயிகள், முதலில் உரத்தை வேறு பாத்திரங்களில் கரைத்து அதன் பின் சொட்டுநீர் பாசன குழாய்களில் செலுத்தி பயன்படுத்த வேண்டும். இதனால் விவசாயிகளுக்கு கூடுதல் பணிச்சுமை ஏற்பட்டு வந்தது. இதனை தொடர்ந்து, தேனி மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையில் விவசாயிகள் சொட்டுநீர் பாசனத்தில் ஈடுபட்டுள்ளதாகவும், இவர்களுக்கு நீரில் எளிதில் கரையும் தன்மை உள்ள வெள்ளை பொட்டாஷ் உரங்களை சப்ளை செய்ய வேண்டும், என கலெக்டர் பழனிசாமி அரசுக்கு பரிந்துரை செய்தார். இதனை ஏற்றுக் கொண்ட அரசு நீரில் கரையும் தன்மை கொண்ட வெள்ளை பொட்டாஷ் உரங்களை வழங்கி உள்ளது. அடுத்தடுத்து தொடர்ந்து வெள்ளை பொட்டாஷ் உரத்தை தேவைக்கு ஏற்ப சப்ளை செய்யவும் ஒப்புக்கொண்டுள்ளது. இந்த உரங்கள் தொடக்க விவசாய கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. காமயகவுண்டன்பட்டி, எரசக்கநாயக்கனூர், வடபுதுப்பட்டி, கூடலூர், நாகலாபுரம், சீப்பாலக்கோட்டை, லட்சுமிபுரம், ராயப்பன்பட்டி, உப்புக்கோட்டை, சின்னமனூர், உத்தமபாளையம், அனுமந்தன்பட்டி, கம்பம் உட்பட பல்வேறு கூட்டுறவு சங்கங்கள் மூலம் இந்த உரங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.தொடர்ந்து இந்த உரங்கள் வழங்கப்படும், என தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**கரும்பு பயிர்கள் பூத்துள்ளதால் விவசாயிகள் கலக்கம் : "கட்டிங்' ஆர்டரில் முன்னுரிமை அளிக்க கோரிக்கை**

கடலூர்: கடலூர் மாவட்டத்தில் ஏற்பட்ட சீதோஷ்ண நிலை மாற்றத்தால் பூ வைத்துள்ள கரும்புகளை உடனடியாக வெட்ட ஆலை நிர்வாகம் "கட்டிங்' ஆர்டர் கொடுக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.கடலூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழை அளவு 1,309.4 மி.மீ., ஆகும். இதில், குளிர் காலமான ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் 47.7 மி.மீ., அளவும், கோடை காலமான மார்ச் முதல் மே மாதம் வரை 95.7 மி.மீ., அளவும், தென்மேற்கு பருவமழை காலமான ஜூன் முதல் செப்டம்பர் மாதம் வரை 392.4 மி.மீ., அளவும், வடகிழக்கு பருவமழை காலமான அக்டோபர் முதல் டிசம்பர் வரை 773.7 மி.மீ., மழையும் பெய்ய வேண்டும்.ஆனால், இந்தாண்டு மாவட்டத்தில் குளிர் காலத்தில் 14.1 மி.மீ., அளவும், கோடை காலத்தில் 55.6 மி.மீ., என சராசரி அளவை விட குறைவாகவே மழை பெய்தது. அதேபோன்று தென்மேற்கு பருவமழை காலமான ஜூன் மாதத்தில் 49.9 மி.மீ., ஜூலை மாதத்தில் 27.9 மி.மீ., என மிகக் குறைந்த அளவே மழை பெய்ததால், விவசாயிகள் கலக்கமடைந்தனர்.இந்நிலையில் ஆகஸ்ட் மாதம் சராசரி அளவை விட இரு மடங்கு கூடுதலாக 259.7 மி.மீ., மழை கொட்டியது. செப்டம்பர் மாதத்தில் 129.4 மி.மீ, மழைக்கு 123.5 மி.மீ., மழை பெய்தது. ஆகஸ்ட் மாதம் கொட்டி தீர்த்த மழையால் தென்மேற்கு பருவ காலத்தில் சராசரி மழை அளவு கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.அதன் பிறகு வடகிழக்கு பருவமழை போதிய அளவு பெய்யவில்லை. நேற்று வரை 688.9 மி.மீ., மழை பெய்திருக்க வேண்டும். ஆனால், 442.6 மி.மீ., அளவே மழை பெய்துள்ளதோடு, கடும் பனிப்பொழிவும் இரவில் குளிர் நிலவி வருகிறது.மாவட்டத்தில், கடந்த ஆகஸ்ட் மாதம் பெய்த கனமழை காரணமாகவும், தற்போது நிலவிவரும் கடும் குளிர் காரணமாக, கரும்பு பயிர்கள் பூத்து வருவதால், எடை குறைவு ஏற்படுமோ என கரும்பு விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.இதுகுறித்து, கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையத் தலைவர் பன்னீர்செல்வம் கூறுகையில், "மாவட்டத்தில் கோ - 86032 என்ற ரகம் 60 சதவீதம், கோ.க - 24, ரகம், இதர ரகங்கள் 40 சதவீதம் சாகுபடி செய்யப்படுகின்றன.

இதில் சில ரகங்கள், தென்மேற்கு பருவ காலத்தில் அளவுக்கு அதிகமாக மழை பெய்தால், குறிப்பாக ஆகஸ்ட் மாதத்தில் அதிக மழை பெய்தால், கரும்பு பயிரில் பூ மொட்டு வைக்கும். இதனை அறிந்து கூடுதல் உரம் வைத்து தண்ணீர் பாய்ச்சினால், பூ பூப்பதைத் தவிர்க்கலாம். கவனிக்காமல் விட்டால், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் கடும் குளிர் இருந்தால், கரும்பில் உள்ள மொட்டுக்கள் பூத்து விடும்.இவ்வாறு பூ வைத்த கரும்புகளை 45 நாட்களுக்குள் அறுவடை செய்தால், சர்க்கரை கட்டுமானம் குறையாது. அதற்கு மேல் காலம் கடத்தினால், சர்க்கரை கட்டுமானம் குறையும்' என்றார்.

இதுகுறித்து பாரி சர்க்கரை ஆலை பொது மேலாளர் கருணாகரன் கூறுகையில், "மாவட்டத்தில் இந்தாண்டு ஆகஸ்ட் மாதம் அளவுக்கு அதிகமாக பெய்த மழையினாலும், தற்போது கடும் குளிர் நிலவி வருவதால் குறிப்பிட்ட ரக கரும்புகள் பூ வைத்துள்ளன. மொத்த சாகுபடியில் 10 சதவீத அளவிற்கு பூ வைத்துள் ளது. இதனால் பெரிய அளவில் இழப்பு ஏற்பட வாய்ப்பில்லை' என்றார்.இருப்பினும், கரும்பு பயிரிட்டுள்ள விவசாயிகள், பூ வைத்துள்ள கரும்புகளை உடனடியாக வெட்டிட "கட்டிங் ஆர்டர்' கொடுப்பதில் ஆலை நிர்வாகம் முன்னுரிமை வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### அமெரிக்க மிளகாய் கின்னஸ் சாதனை



மெக்சிக்கோ : அமெரிக்க மிளகாய் தான் உலகிலேயே அதிக காரத்தன்மைமிக்கது. அது கின்னஸில் இடம் பிடித்து சாதனை படைத்தது.அமெரிக்க நாட்டை சேர்ந்த எட்குரிய் என்ற விவசாயி வளர்த்த மிளகாய் தான் உலகிலேயே மிகக் காரமான மிளகாய் என அறிவியல் அறிஞர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. கடந்த நான்கு ஆண்டுகளாக இந்த மிளகாய் பற்றி வின்த்ரோப் பல்கலைக்கழகம் ஆய்வுக்கு எடுத்து கொண்டது. ஆய்வின் முடிவில் இது உலகிலேயே மிகக் காரமான மிளகாய் என சான்றிதழ் வழங்கி கின்னஸிலும் இடம் பிடித்தது.நிலநடுகத்தை ரிக்டர் அளவு என குறிப்பது போல, காரத்தன்மையை நாம் ஸ்கோவிலி என அளவிடுகிறோம். அந்த வகை யில் நாம் உணவிற்கு பயன்படுத்தும் மிளகாய் 5 ஆயிரம் ஸ்கோவிலி யூனிட் ஆகும். ஆனால் சாதனை படைத்த இந்த மிளகாயின் காரத்தின் அளவு என்ன தெரியுமா 15 லட்சத்து 69 ஆயிரத்து 300 யூனிட்.நூறு ஆண்டு முன்பு காரத்தை அளவிடும் ஸ்கோவிலி யூனிட்டை ஆராச்சியாளர்கள் கண்டுபிடித்தனர். இதில் சர்க்கரை தண்ணீரை கலந்த கலவை யின் துணையுடன் சூட்டில் வைத்து காரத்தன்மையை கணக்கிடுகின்றனர்.

**காஷ்மீரில் கடுங்குளிர் மக்கள் முடக்கம்**



ஸ்ரீநகர் : காஷ்மீரில் மைனஸ் 15.7 டிகிரி செல்சியஸ் பதிவாகி கடுமையான குளிர்காற்று வீசியது. இதனால் மக்கள் வீடுகளில் முடங்கினர். ஜம்மு-காஷ்மீரில் கடந்த 21ம் தேதி 40 நாள் குளிர்காலம் தொடங்கியது. லடாக் எல்லைப்பகுதியான கார்கிலில் நேற்று மைனஸ் 15.7 டிகிரி செல்சியஸ் பதிவானது. குளிர்காலம் தொடங்கியதற்கு பிறகு இந்த அளவு பதிவானது இதுவே முதல்முறை. லே பகுதியில் மைனஸ் 14.8 டிகிரி செல்சியசும், ஸ்ரீநகரில் மைனஸ் 0.6 டிகிரி செல்சியசும், பகல்ஹாம் மலைப்பகுதியில் மைனஸ் 9.6 டிகிரி செல்சியசும், குல்மார்க்கில் மைனஸ் 8.6 டிகிரி செல்சியசும், குவாசிகண்ட்டில் 0.2 டிகிரி செல்சியசும், கொக்கர்நேக்கில் 0.2 டிகிரி செல்சியசும், குப்வாராவில் மைனஸ் 3.4 டிகிரி செல்சியசும் இருந்தது.

**கரும்புடன் கலெக்டரை விவசாயிகள் முற்றுகை**



தஞ்சை : தஞ்சையில் நடந்த குறைதீர் கூட்டத்தில் கலெக்டரை கரும்புடன் விவசாயிகள் முற்றுகையிட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

தஞ்சை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது. இதில் கலெக்டர் சுப்பையன்  உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.அப்போது கையில் கரும்புகளை ஏந்தியபடி அதிகாரிகளை விவசாயிகள் முற்றுகையிட்டனர். கரும்பு டன்னுக்கு ரூ.4 ஆயிரம் வழங்க வேண்டும். கரும்பு நடவு செய்ய வட்டியில்லா கடனாக ஏக்கருக்கு ரூ.60 ஆயிரம்

வழங்க வேண்டும். மறுதாம்பு கரும்பு சாகுபடி செய்ய ஏக்கருக்கு ரூ.50 ஆயிரம் வழங்க வேண்டும்.

கரும்பு விவசாயிகளை ஆண்டுக்கு ஒருமுறை வெளிமாநிலங்களுக்கு விவசாய சுற்றுலா அழைத்து செல்ல வேண்டும். அந்த செலவை அரசே ஏற்க வேண்டும் என்று அவர்கள் கோஷமிட்டனர். அதன்பின்னர் கூட்டத்திலிருந்து கரும்புகளுடன் விவசாயிகள் வெளிநடப்பு செய்தனர். பின்னர் கூட்டம் நடந்த அறையின் வெளியில் நின்று கோஷங்கள் எழுப்பினர்.இதுகுறித்து தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் சுகுமாறன் கூறும்போது, கடந் தாண்டு கரும்பு டன்னுக்கு ரூ.2,700 மத்திய அரசு அறிவித்தது. மாநில அரசு ஊக்கத்தொகையாக ரூ.650 அறிவித்தது.

இந்த ஆண்டு மத்திய அரசு டன்னுக்கு ரூ.2,100 அறிவித்துள்ளது. மாநில அரசு ஊக்கதொகையாக ரூ.550 மட்டுமே அறிவித்துள்ளது. எனவே கடந்த ஆண்டைவிட ரூ.100 குறைவாக அறிவித்து கரும்பு விவசாயிகளுக்கு மாநில அரசு துரோகம் செய்கிறது. வெட்டுக்கூலி, உரம் என்று எல்லாவற்றையும் வைத்து பார்க்கும்போது கரும்பு டன்னுக்கு ரூ.4 ஆயிரம் அறிவிக்க வேண்டும் என்றார்.கரும்பு விவசாய சங்க செயலாளர் கோவிந்தராஜ் கூறுகையில், பொங்கல் பண்டிகைக்குள் கரும்புக்கான புதிய விலையை அறிவிக்க வேண்டும். இல்லையென்றால் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றார்.

**வெங்காயம் ஏற்றுமதி விலை டன்னுக்கு 150 டாலராக குறைப்பு**



புதுடெல்லி: வெங்காயம் விளைச்சல் அதிகரித்துள்ளதால் மகாராஷ்டிரா மாநிலத்தில் ஒரு கிலோ ரூ.10க்கு விற்கப்படுகிறது. இதற்கிடையே, ஏற்றுமதிக்கான குறைந்தபட்ச விலையை 800 டாலர், 350 டாலர் என்றும் மத்திய அரசு குறைத்தது.இந்நிலையில், வெங்காய

ஏற்றுமதிக்கான குறைந்த பட்ச ஆதரவு விலையை முற்றிலும் நீக்க வேண்டும் என்று மத்திய வேளாண்மைத்துறை அமைச்சர் சரத்பவாரிடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். இந்த கோரிக்கையை பரிசீலிக்கும்படி மத்திய வர்த்தக அமைச்சகத்திற்கு சரத்பவார் பரிந்துரை செய்தார். பவாரின் பரிந்துரையை ஏற்றுக் கொண்ட மத்திய வர்த்தக அமைச்சகம் ஏற்றுமதிக்கான ஒரு டன் வெங்காயத்தின் விலையை 150 டாலராக குறைத்துள்ளது.

**ஓராண்டாகியும் பயிர் காப்பீட்டு இழப்பீட்டுத்தொகை வழங்கவில்லை : குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் புகார்**

திருவாரூர்:  திருவா ரூர் மாவட்டத்தில் கடந்தாண்டு வழங்க வேண்டிய பயிர் காப்பீட்டு இழப்பீட்டு தொகையை உடனே வழங்க வேண்டுமென குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர்.

திருவாரூர் கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று நடந்தது. கலெக்டர் நடராஜன் தலைமை வகித்தார். கூட்டம் துவங்கியவுடன் விவசாயிகள் எழுந்து நின்று பயிர் காப்பீட்டு இழப்பீட்டு தொகை ஓராண்டாகியும் கிடைக்கவில்லை, விவசாயிகளை தொடர்ந்து அலட்சியப்படுத்தி வரும் மத்திய, மாநில அரசுகளை கண்டிக்கிறோம் என்று 10 நிமிடம் வரை கோஷமிட்டனர். அப்போது கடந்த ஆண்டுக்கான பயிர் காப்பீட்டு இழப்பீட்டுத்தொகை விரைவில் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கலெக்டர் நடராஜன் உறுதியளித்தார். இதைதொடர்ந்து விவசாயிகள் கோஷமிடுவதை நிறுத்தினர். பின்னர் கூட்டத்தில் விவசாயிகள் பேசிய விவரம் வருமாறு: பாண்டியன்: வரும் பொங்கல் பண்டிகைக்குள் கடந்தாண்டுக்கான பயிர் காப்பீட்டு தொகை வழங்கவில்லையென்றால் தொடர் போராட்டம் நடத்தப்படும். மாவட்டத்தில் நில வழிகாட்டி மதிப்பை பதிவாளர் தன் விருப்பம்போல் செயல்படுத்தி வருவதால் பத்திரப்பதிவு செய்பவர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். நில வழிகாட்டி குழு தலைவராக இருக்கும் கலெக்டர் ஆய்வு செய்ய

வேண்டும். சுந்தரமூர்த்தி: மாவட்டத்தில் கோமாரி நோய் தாக்கி இறந்த ஆடு, மாடுகளுக்கு அரசு சார்பில் இழப்பீட்டு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சத்தியநாராயணன்: மேம்படுத்தப்பட்ட காப்பீட்டு திட்டம் என்ற பெயரில் காப்பீட்டு திட்டத்திற்கு மூடுவிழா செய்வதற்கான பணிகளை மத்திய அரசு அறிவித்துள்ளது. இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுவர் என்பதால் மாநில அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சேதுராமன்: மஞ்சள் நோய் தாக்குதல் காரணமாக சம்பா பயிரில் மகசூல் இழப்பு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். மேலும் கூட்டத்தில் விவசாயிகள் பேசும்போது, கடந்த ஆண்டுக்கான பயிர் காப்பீட்டு இழப்பீட்டுத்தொகை வழங்க வேண்டும். அறுவடை பணிக்கான வேளாண்மை இயந்திரங்களை வைத்துள்ள தனியார் நிறுவனத்தினர் அதிக வாடகை வசூலிப்பதால் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர். கலெக்டர் நடராஜன் பேசுகையில், கடந்தாண்டு பயிர் காப்பீட்டுக்கான கணக்கெடுப்பு பணிக்காக மாவட்ட அளவிலான நிலை அலுவலர்கள் 5 பேர்களை கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. ஒரு வார காலத்திற்குள் இந்த குழுவினர் அளிக்கும் அறிக்கை அரசுக்கு அனுப்பப்பட்டு விவசாயிகளுக்கு தொகை கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும். நில வழிகாட்டி மதிப்பு குறித்து ஆய்வு செய்யப்படும். மேலும் உழவர் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் மாவட்டத்தில் 56,653 பேருக்கு கல்வி, திருமணம், முதியோர் உதவித்தொகை, இயற்கை மற்றும் விபத்து மரணம் என மொத்தம் ரூ.35,46,97,961 வழங்கப்பட்டுள்ளது என்றார்.

டிஆர்ஓ மணிமாறன், நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் அழகிரிசாமி, வேளாண்மை இணை இயக்குனர் தனசேகரன், துணை இயக்குனர் மயில்வாகனன், கூட்டுறவு மண்டல இணை பதிவாளர் ரவிச்சந்திரன், பொதுபணித்துறை செயற்பொறியாளர் ரவிச்சந்திரன் மற்றும் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**நெற்பயிரில் குலைநோய், செவட்டை நோயை கட்டுப்படுத்த ஆலோசனை**

செம்பட்டி: நெற் பயிர்களில் குலைநோய் மற்றும் செவட்டை நோயை கட்டுப்படுத்த வேளாண் அதிகாரிகள் ஆலோசனை வழங்கியுள்ளனர். திண்டுக்கல் மாவட்டத்தில் சுமார் 50 ஆயிரம் ஹெக்டேருக்கு மேல் நெல் பயிரிடப்பட்டுள்ளது. தற்போது போதிய மழை இல்லாதது மற்றும் தட்ப வெப்பநிலை மாற்றத்தால் பல்வேறு விதமாக நோய்கள் நெற்பயிர்களை தாக்கி வருகின்றன.

இதனால் விளைச்சல் பாதிக்கப்படும் நிலை உருவாகி உள்ளது. நெற்பயிர்களில் தற்போது பரவ லாக காணப்படும் குலை நோய் மற்றும் செவட்டை நோய் தாக்குதலை கட்டுப்படுத்தும் முறை குறித்து வேளாண் அதிகாரிகள் கூறியதாவது: குலைநோய் அனைத்து பயிரின் வளர்ச்சி காலங்களிலும் சேதம் விளைவிக்க கூடியது. நோயுற்ற இலை யின் மேல் சிறிய பழுப்புநிற புள்ளிகள் தெரியும். இவை பெரிதாகும் போது கண் போன்ற வடிவத்துடன் ஓரங்களில் பழுப்பு நிறமாக வும், நடுப்பகுதி சாம்பல் நிறமாகவும் காணப்படும்.

இது பைரிகுலோரியா ஒரைசியா என்ற பூஞ்சாணத்தினால் உண்டாகிறது. இவை காற்றின் மூலமும், நோய் தாக்கிய விதை மற்றும் வைக்கோல் மூலம் பரவும். இதனால் நெற்பயிர் பதராகிவிடும்.

இதனை கட்டுப்படுத்த, ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் கார்பென்டாசிம், டிரை சைக்ளசோல் அல்லது அசாஸிஸ்ரோபின் இதில் ஏதேனும் ஒரு மருந்தை 200 மில்லி கிராம் கலந்து தெளிக்க வேண்டும்.

இயற்கை விவசாயிகள், ஒரு கிலோ சூடோமோனாஸ் புளூரோசன்ஸ் பாக்டீரியத்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். இதனுடன் ரசாயன மருந்து கலக்கக்கூடாது.

இதுபோன்று பாக்டீரி யா இலைக்கருமல் நோய் தாக்கினால், இலை யில் நீண்ட

கோடுகளாக அலை போன்ற ஓரங்களுடன் பழுப்பு கலந்த மஞ்சள் நிறம் போன்று தெரியும்.

இதனை கட்டுப்படுத்த நோய் தென்பட்டவுடன் தழைச்சத்து அதிகமாக இடு வதை தவிர்க்க வேண்டும்.

20 சதவீதம் பசுஞ்சான கரைசலை தெளிக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு காப்பர் ஹைட்ராக்சைடு 500 கிராம் அல்லது ஸ்டெரெப்மாமைசின் சல்பேட், டெட்ராசைக்கிளின் 120 கிராம் உடன் காப்பர் ஆக்ஸிகுளோரைடு 500 கிராம் கலவையை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

செவட்டை நோய் தாக்கினால் இலையின் பின்புறம் சாம்பல் படர்ந்து காணப்படும். இலைகள் வெளுத்து மஞ்சள் நிறமாக இருக்கும்.

இதனை கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருடன் 2.5 மில்லி டைகோபால் அல்லது 0.6 மில்லி ஓபிரான் கலந்து தெளிக்க வேண்டும்.

யூரியாவை வேப்பம் புண்ணக்குடன் கலந்து தெளிக்க வேண்டும். அதிக அளவில் யூரியா போடக்கூடாது. வயல், வரப்பு ஓரங்களில் இருக்கும் கோரைப்புற்களை அகற்ற வேண்டும். இவ்வாறு வேளாண் அதிகாரிகள் கூறினர்.

**செங்கரும்பு விளைச்சல் பாதிப்பு**

சிவகாசி: பொங்கலு க¢கு தேவையான  செங்   கரும்பு அறுவடைக¢கு   தயார் நிலையில் உள்ளது. இந்தாண்டு போதிய மழை இல்லாததால் விளைச்சல் பாதியாக குறைந்துள்ளது. சிவகாசி தாலுகா எ£¤ச்சநத்தம், முருகனேரி கிராமத்தில், விவசாயிகள்  100 ஏக¢கர் பரப்பில் செங்    கரும்பு பயிர் செய்துள்ளனர். கடந்த ஏப்ரல் மாதம் பயிர் செய்யப்பட்ட கரும்புகள் தற்போது 5 முதல் 6 அடி வரை வளர்ந்து அறுவடைக¢கு தயார் நிலையில் உள்ளது. கரும்பு நடவு செய்து 10 மாதங்களில் விளைச்சல் அடையும்.

இந்த ஆண்டு பருவ மழை சரவர பெய்ய வில்லை. இதனால் கரும்பு பயிர்களுக¢கு போதிய தண்ணீர் இன்றி  விளைச்சல் பாதிக்கப் பட்டுள்ளது. முருகனேரி

கிராமத்தில் 100 ஏகஂகர் பரப்பில் விவசாயிகள் கரும்பு பயிரிட்டுள்ளனர்.
இதில் இரண்டு ஏகஂகரில் மட்டும் நல்ல விளைச்சல் அடைந்து, தை பொங்கலுக்கு தயார் நிலையில் உள்ளது. மற்ற நிலங்களில் 3 முதல் 4 அடி வரையிலே கரும்பு விளைந்துள்ளதால் தை பொங்கலு கஂகு அறுவடை செய்ய முடி யாத நிலையில் உள்ளது. இந்த கரும்புகள் இரண்டு மாதஙஂகளுகஂகு, பின்னர் கரு ம்பு சாறு தயாரிகஂக பயன் படும். விளைச்சல் பாதிப் பால் விவசாயிகளுகஂகு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து விவசாயி செந்தில் கூறுகையில், முருகனேரி பகுதியில் 100 ஏகஂகர் பரப்பில் கரும்பு பயிர் செய்யப் பட்டுள்ளது. கரும்பு பயிர் செய்ய ஏகஂகருகஂகு ரூ70 ஆயிரம் வரை செலவாகிறது. கரும்பு நல்ல விளைச்சல் இருந்தால் 15 கரும்பு கொண்ட ஒரு கட்டு ரூ. 300 வரை விலை போகும்.
மழை இல்லாததால் விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த பகுதியில் 100 ஏகஂகர் கரும்பு பய¤ர் செய்துள்ளனர். இதில் 2 ஏகஂகர் கரும்புகள் மட்டுமே தற்போது அறுவடைகஂகு தயார் நிலையில் உள்ளது என்றார்.

**பருவமழை பொய்த்ததால் பயிர்கள் கருகிவிட்டது**

தொண்டி: தொண்டி மற்றும் சுற்று வட்டாரப் பகுதியில் பருவமழை பொய்த்ததால், நெல் பயிர்கள் கருகி வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். அரசு நிவாரணம் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.
ராமநாதபுரம் மாவட்டத்தில் திருவாடானை தாலுகாவில் ஜமார் 40 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பில் நெல் பயிர் நடவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு பருவ மழை பொய்த்துவிட்டதால் கண்மாய் மற்றும் பண்ணை குட்டைகள் தண்ணீர் இல்லாமல் வறண்டு காணப்படுகிறது. இவற்றை நம்பி நடவு செய்யப்பட்ட நெல் பயிர்கள் கருகி வருகிறது.
ஒரு சில பகுதிகளில் நெல் பயிர்கள் சற்று வளர்ந்துள்ளது. அவற்றில் களை எடுக்கவும் மருந்து தெளிக்கவும் முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் விரக்தி அடைந்த விவசாயிகள் வயல்களில் மாடுகளை மேய விட்டுள்ளனர்.
இதுகுறித்து விவசாயி முத்தையா கூறியதாவது: ‘‘பருவ மழை மற்றும் கண்மாய், ஊரணி தண்ணீரை நம்பி விவசாயம் செய்கிறோம். கடந்த இரண்டு ஆண்டுகளாக

பருவமழை பொய்த்துவிட்டதால், இந்த ஆண்டு நடவு செய்யப்பட்ட நெல் பயிர்கள் கருகி வருகிறது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு பெரும் நஷ்டத்தை சந்தித்து இருக்கிறோம். கருகிய பயிர்களில் மாடுகளை மேய விட்டுள்ளோம். அதனால் அரசு தொண்டி பகுதி விவசாயிகளுக்கு நிவாரணம் அறிவிக்க வேண்டும்'' என்றார்.

**விவசாயிகளுக்கு வழங்கல் மழைக்காலங்களில் பயிர்களை பாதுகாக்க சில்பாலின் பாய்கள்**

வில்லியனூர்: அறுவடை செய்த விளைபொருட்களை மழை காலங்களில் பாதுகாக்க விவசாயிகளுக்கு வேளாண்துறை மூலம் மானிய விலையில் சில்பாலின் பாய்கள் வழங்கப்பட்டது. புதுச்சேரி வேளாண் துறை மூலம் விவசாயிகளுக்கு பயிர் உற்பத்தி தொழிற்நுட்ப திட்டத்தின் மூலம் அறுவடைக்கு பிந்தைய தானிய பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி கூடுதல் வேளாண் இயக்குநர் அலுவலகத்தில் நடந்தது. இத்திட்டத்தின் மூலம் 50 பொது பிரிவு சேர்ந்தவர்களுக்கும், 15 தாழ்த்தப்பட்ட பிரிவு விவசாயிகளும், 21விதை உற்பத்தியாளர்களும் கலந்து கொண்டு பயன் பெற்றனர். அறுவடை செய்த விளைபொருட்களை மழை காலங்களில் பாதுகாக்கவும், அவற்றை உலர்த்துவதற்கும், சில்பாலின் பாய்களை மானிய விலை யில் கூடுதல் வேளாண் இயக்குனர் ரவிப்பிரகாசம் வழங்கினார். இணை வேளாண் இயக்குனர் பாஸ்கர், துணை வேளாண் இயக்குனர் கார்த்திகேயன் கலந்து கொண்டனர். ஏற்பாடு களை வேளாண் அலுவலர் உட்பட ஊழியர்கள் செய்திருந்தனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வெங்காயம் ஏற்றுமதி விலை 150 டாலராக குறைப்பு**



புனே

வெங்காயத்திற்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை டன் ஒன்றிற்கு 150 டாலராக மத்திய அரசு குறைத்துள்ளது. ஏற்றுமதியை அதிகரிக்கும் வகையில் மத்திய அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

**ஆகஸ்டு மாதத்தில்...**

வெங்காயம் வரத்து குறைந்தது மற்றும் தட்டுப்பாடு கரணமாக ஆகஸ்டு மாதம் முதல் உள்நாட்டில் வெங்காயம் விலை அதிகரிக்க தொடங்கியது. இதனையடுத்து மத்திய அரசு உள்நாட்டில் சப்ளையை அதிகரிக்கவும், விலை உயர்வை தடுக்கவும் நோக்கிலும் ஆகஸ்டு 14–ந் தேதி வெங்காயத்திற்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை 650 டாலராக (1 டன்) நிர்ணயித்தது. அதாவது இந்த விலைக்கு குறைவாக வெங்காயத்தை ஏற்றுமதி செய்ய முடியாது.

மேலும் உள்நாட்டில் சப்ளையை அதிகரிக்கும் வகையில் எகிப்து, சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து வெங்காயம் இறக்குமதி செய்யப்பட்டது. இருப்பினும் விலை உயர்ந்து கொண்டே சென்றது. எனவே, செப்டம்பர் 19–ந் தேதி மீண்டும் குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை 900 டாலராக அதிகரித்தது. மேலும் நவம்பர் 1–ந் தேதி வெங்காயத்திற்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை 1,150 டாலராக உயர்த்தியது.

இதன் பிறகு வெங்காயம் விலை குறைந்து வந்துள்ளதால் ஏற்றுமதி விலையை மத்திய அரசு படிப்படியாக குறைத்து வந்துள்ளது. டிசம்பர் 10–ந் தேதி 800 டாலராகவும், அதன் பிறகு 350 டாலராகவும் குறைக்கப்பட்டது.

<u>விவசாயிகள் நலன்</u>

தற்போது இம்மாதத்தில் மூன்றாவது முறையாக ஏற்றுமதிக்கான குறைந்தபட்ச விலையை 350 டாலரிலிருந்து 150 டாலராக குறைத்துள்ளது. விவசாயிகள் நலனை கருத்தில் கொண்டும், சர்வதேச சந்தையில் ஏற்றுமதியாளர்கள் போட்டியிடும் வகையிலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய தெரிவித்துள்ளது.

**வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்**
**இயற்கை விவசாயிகள் அமைப்பு கோரிக்கை**

திருவண்ணாமலை

வறட்சியால் பாதிக்கப் பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என்று இயற்கை விவசாயிகள் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து இயற்கை விவ சாயிகள் அமைப்பு மாநில பொதுச்செயலாளர் ஜாகிர் ஷா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:–

<u>நஷ்டம் ஏற்படுகிறது</u>

தமிழக அரசு கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.2650 அறிவித்துள் ளது. இது கரும்பு விவசாயிகளுக்கு ஏமாற்றம் அளிக்கிறது. திருவண்ணாமலை, விழுப்புரம், வேலூர், காஞ்சீபுரம், தர்மபுரி, ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சி, பெரம்பலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் கரும்பு உற்பத்தி அதிகமாக இருக்கிறது.

இந்த மாவட்ட விவசாயி களுக்கு வாழ்வாதாரமே கரும்புதான், அவர்கள் இட்ட பயிர்களுக்கு நஷ்டம்தான் ஏற்படுகிறது. ஒரு டன் கரும் பில் 100 கிலோ சர்க்கரை, 150 யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப் படுகிறது.

ரூ.4 ஆயிரம் வேண்டும்

மேலும் பல கழிவு பொருட் கள் மூலம் சர்க்கரை ஆலைகள் ரூ.40 ஆயிரம் வரை லாபம் அடைகின்றன. இதில் 10 சதவீத தொகைக்கூட விவசாயிகளுக்கு கிடைப்பதில்லை. எனவே தமிழக அரசு ஒரு டன் கரும்புக்கு ரூ.4 ஆயிரம் உயர்த்தி வழங்க வேண்டும்.

உள்நாட்டில் கரும்பு விவ சாயிகள் நிலையை கேள்விக்குறியாக இருக் கும்போது வெளிநாட்டில் இருந்து சர்க்கரை இறக்குமதி செய்வதை ரத்து செய்ய வேண்டும்.

வறட்சி நிவாரணம்

தமிழ்நாடு முழுவதும் சரியான நேரத் தில் பருவமழை பெய்யாததால் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து விவசாயிகள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட விவ சாயிகளுக்கு அரசு அறிவித்த வறட்சி நிவாரணம் இதுவரை கிடைக்கைவில்லை.


உடனடியாக விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேற்கண்டவாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### அட்மா திட்டம் நிலக்கடலை சாகுபடி குறித்த விவசாயிகளுக்கு பயிற்சி



சேலம் மாவட்டம் காடையாம்பட்டி வட்டாரம் கூ.குட்டப்பட்டி கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் நிலக்கடலை சாகுபடி தொழில்நுட்பங்கள் மற்றும் கால்நடை கோமாரி நோய் தடுப்பு முறைகள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி நடநதது. இந்த பயிற்சியில், வட்டார தொழில் நுட்ப மேலாளர் ராஜேந்திரன் அனைவரையும் வரவேற்றார். காடையாம்பட்டி வேளாண்மை உதவி இயக்குனர் நாசர் தலைமை தாங்கி நிலக்கடலை உயிர் உரங்களின் பங்கு குறித்து பேசினார். வேளாண்மை அலுவலர் சம்பத்குமார் நிலக்கடலை சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்து பேசினார். கால்நடை உதவி மருத்துவர் நவின்குமரவேல் கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோய் குறித்தும் அதன் தடுப்பு குறித்தும் விளக்கினார். பட்டுவளர்ச்சிதுறை உதவிஆய்வாளர் வெங்கடாசலம், தோட்டக்கலை உதவி அலுவலர் ராஜேஸ்வரன் உள்பட பலர் கலந்து கொண்டு பேசினர்கள். இதில் 50 விவசாயிகள் கலந்து கொண்டார்கள். இதற்கான ஏற்பாடுகளை அட்மா தொழில் நுட்ப வல்லுநர்கள் சிவக்குமார், பழனியப்பன் ஆகியோர் செய்திருந்தார்கள்.

### நாமக்கல்லில் 5 ஆயிரம் மூட்டை பருத்தி ரூ.80 லட்சத்துக்கு ஏலம்



நாமக்கல்லில் பருத்தி ஏலம் நடைபெற்றபோது எடுத்த படம்.

நாமக்கல் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று 5 ஆயிரம் மூட்டை பருத்தி ரூ.80 லட்சத்துக்கு ஏலம் போனது.

பருத்தி ஏலம்

நாமக்கல் - திருச்செங்கோடு ரோட்டில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று நாமக்கல் கூட்டுறவு வேளாண் உற்பத்தியாளர்கள் சங்க தலைவர் தென்னரசு மற்றும் கூட்டுறவு சங்க அதிகாரிகள் முன்னிலையில் ஏலம் நடந்தது.

இந்த ஏலத்துக்கு நாமக்கல், புதுச்சத்திரம், எருமப்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப் பேட்டை, ராசிபுரம் என மாவட்டம் முழுவதும் இருந் தும், அண்டை மாவட்டங்க ளில் இருந்தும் விவசாயிகள் ஏறத்தாழ 5 ஆயிரம் மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

ரூ.80 லட்சத்துக்கு விற்பனை

இந்த பருத்தி மூட்டைகள் ஏறத்தாழ ரூ.80 லட்சத்துக்கு ஏலம் போனது. ஆர்.சி.எச்.ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்து 421 முதல் ரூ.5 ஆயிரத்து 91 வரைக்கும், டி.சி.எச்.ரக பருத்தி ரூ.5 ஆயிரத்து 595 முதல் ரூ.6 ஆயிரத்து 950 வரைக்கும் ஏலம் போனது. இந்த பருத்தி மூட்டைகளை கோவை, அவினாசி, திருப்பூர், திருச் செங்கோடு, கொங்கணாபுரம், சேலம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர்.

கடந்த வாரம் 3 ஆயிரத்து 500 மூட்டை பருத்தி ஏலத்திற்கு வந்திருந்தது. இவைகள் ரூ.60 லட்சத்துக்கு ஏலம் போனது. தற்போது 5 ஆயிரம் மூட்டை பருத்தி ரூ.80 லட்சத்துக்கு விற்பனையாகி உள்ளது. கடந்த வாரத்தை விட இந்த வாரம் பருத்தி மூட்டைகளும் அதிகரித்து, ஏலமும் கூடுதல் விலைக்கு போய் உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். வரும் வாரங்களில் மேலும் விலை உயர வாய்ப்பு உள்ளது என் றும் அவர்கள் தெரிவித் தனர்.

**மேட்டூர் அணையில் இருந்து சம்பா சாகுபடிக்காக பிப்ரவரி மாதம் வரை தண்ணீர் திறக்க வேண்டும் விவசாயிகள் வலியுறுத்தல்**



தஞ்சாவூர்,

மேட்டூர் அணையில் இருந்து சம்பா சாகுபடிக்காக பிப்ரவரி மாதம் வரை தண்ணீர் திறக்க வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தினர்.

விவசாயிகள் கருத்து

தஞ்சை மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடந்த குறைதீர்க்கும் கூட்டத்தில் விவசாயிகள் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:–

தென்னங்குடி பழனிமாணிக்கம்: பயிர் காப்பீடு செய்யப்பட்டதற்கான இழப்பீட்டு தொகை இன்னும் வரவில்லை. பொங்கல் பண்டிகை வரவு உள்ளதால் செலவுக்கு பணம் தேவைப்படுகிறது. எனவே இழப்பீட்டு தொகையை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாலசுந்தரம்(தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர்): விவசாய மின் இணைப்பு பெறுவதற்கு விண்ணப்பம் அளித்து விவசாயிகள் பல ஆண்டுகள் காத்திருக்கின்றனர். மின் இணைப்புக்காக காத்திருக்கும் விவசாயிகளுக்கு உடனே மின் இணைப்பு வழங்க மின்சார வாரியம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆம்பலாப்பட்டு தங்கவேல்: கல்லணை கால்வாயின் சி.எம்.பி. வடகாடு வாய்க்காலில் கடைமடை பகுதிக்கு தண்ணீர் வராததால் நடப்பு ஆண்டு அப்பகுதி முழுவதும் தரிசாக கிடக்கிறது. இதனால் அப்பகுதி விவசாயிகள் மிகுந்த பாதிப்புக்கு ஆளாகி உள்ளனர். எனவே அவர்களுக்கு ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் வீதம் நிவாரணம் வழங்க வேண்டும்.

தங்கப்பன்உடையான்பட்டி ராமசாமி: அண்டை மாநிலமான உத்தரபிரதேசத்தில் கரும்பு டன்னுக்கு ரூ.2 ஆயிரத்து 800 அறிவிக்கப்பட்டுள்ளது. உரவிலை, மராமத்து செலவுகள் அதிகமாக உள்ளதால் தமிழகஅரசு கரும்புக்கான விலையை மறுபரிசீலனை செய்து கரும்பு டன்னுக்கு ரூ.4 அயிரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

<u>உரிய நடவடிக்கை</u>

எஸ்.புதூர் யுவராஜ்: நரசிங்கம்பேட்டையில் மீத்தேன் வாயு எடுப்பதற்காக ஓ.என்.ஜி.சி. நிறுவனத்தினர் நிலத்தை தோண்டினர். அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் தாசில்தார் அங்கே வந்து தோண்டும் பணிக்கு தடை விதித்தார். இதனால் அந்த பணி நிறுத்தப்பட்டது. அந்த நிறுவனத்தினர் மீண்டும் வந்தால் என்ன செய்ய வேண்டும்.

கலெக்டர் சுப்பையன்: இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

பொன்னவராயன்பேட்டை வீரசேனன்: மேட்டூர் அணையில்இருந்து பாசனத்திற்காக திறந்துவிடப்பட்ட தண்ணீர் ஜனவரி 28–ந்தேதியுடன் மூடப்படும் என தெரிகிறது. அப்படி மூடப்பட்டால் எங்களது பகுதியில் சாகுபடி செய்ய முடியாமல் போய்விடும். எனவே மேலும் 15 நாட்களுக்கு தொடர்ந்து தண்ணீர் திறந்துவிட வேண்டும்.

அம்மையகரம் ரவிச்சந்தர்: தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு ஏ.டி.எம். கார்டு வழங்க வேண்டும். மாட்டு சந்தைக்கு விதித்துள்ள தடையை நீக்க வேண்டும்.

நெல்லுக்கான விலை

மதுக்கூர் சந்திரன்: நெல் சாகுபடியில் செலவுகள் அதிகரித்துவிட்டன. இந்த சுமைகளை எல்லாம் விவசாயிகள் தான் சுமக்க வேண்டும். எனவே நெல்லுக்கான விலையை குவிண்டாலுக்கு ரூ.2 ஆயிரத்து 500 என அரசு அறிவிக்க வேண்டும்.

புனல்வாசல் சவரிமுத்து: தென்னை மரங்களில் தேங்காய்களை பறிக்கவும், தேங்காய்களை மட்டை நீக்கி உறிக்கவும் கூலி ஆட்கள் கிடைப்பதில்லை. எனவே தென்னை சாகுபடியாளர்களுக்கு தேங்காய்களை பறிப்பதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால் சாகுபடியாளர்கள் பெருத்த சேதமும், நஷ்டமும் அடைந்து வருகின்றனர். எனவே தென்னை விவசாயிகளை காப்பாற்ற ஆள் தூக்கி எந்திரத்தை கொண்டு தேங்காய் பறிக்கவும், உறிப்பதற்கான எந்திரங்களையும் வேளாண்மைத்துறை மூலமாக வாடகைக்கு விட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேற்கண்டவாறு விவசாயிகள் தெரிவித்தனர்.

**தஞ்சை மாவட்டத்தில் 262 எக்டேரில் சம்பா அறுவடை முடிவடைந்துள்ளது கலெக்டர் பேச்சு**



தஞ்சாவூர்,

தஞ்சை மாவட்டத்தில் இதுவரை 262 எக்டேரில் சம்பா அறுவடை பணி முடிவடைந்துள்ளது என கலெக்டர் சுப்பையன் பேசினார்.

<u>விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்</u>

தஞ்சை மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நேற்றுகாலை நடந்தது. கூட்டத்திற்கு கலெக்டர் சுப்பையன் தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

தஞ்சை மாவட்டத்தில் 2013–14–ம் ஆண்டு சம்பா பருவத்தில் 1 லட்சத்து 6 ஆயிரத்து 77 எக்டேர் நிலப்பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. நேரடி நெல் விதைப்பின் மூலம் 2 ஆயிரத்து 682 எக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. இதுவரை 262 எக்டேரில் சம்பா நெற்பயிர் அறுவடை செய்யப்பட்டுள்ளது. எக்டேருக்கு சராசரியாக 6 ஆயிரத்து 150 கிலோ நெல் மகசூல் கிடைத்துள்ளது. தாளடியில் 25 ஆயிரத்து 588 எக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

நடப்பு பருவத்திற்கு பயிறு வகை சாகுபடி இலக்கு 43 ஆயிரம் எக்டேராக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதற்கு தேவையான சான்று பெற்ற விதைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 50 சதவீத மானிய விலையில் உயிர் உரங்கள், களைக்கொல்லி மருந்து, நுண்ணூட்டச்சத்து, தெளிப்பான், விதைக்கும் கருவி ஆகியவை வழங்கப்படுகின்றன. இந்த திட்டத்தின் கீழ் பயன்பெற பயறு சாகுபடி செய்யும் விவசாயிகள் குடும்ப அட்டை நகல், சிட்டா, அடங்கல் ஆகிய ஆவணங்களுடன் தங்கள் பகுதி வேளாண்மை உதவி இயக்குநர்களை அணுகலாம்.

<u>உரம் வினியோகம்</u>

தீவிர கரும்பு சாகுபடி முறையில் கரும்பு நடவு செய்து நுண்ணீர்ப்பாசனம் அமைக்கும் விவசாயிகளுக்கு ஒரு எக்டேருக்கு ரூ.30 ஆயிரம் மதிப்பில் நீரில்

கரையும் உரங்கள் மற்றும் இடுபொருட்கள் வழங்கப்படும். கரும்பு, தென்னை ஆகியவற்றிற்கு நுண்ணீர்ப்பாசனம் அமைக்க தேசிய தோட்டக்கலை முகமை மூலம் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் வழங்கப்படும். தஞ்சை மாவட்டத்தில் 205 எக்டேரில் தீவிர கரும்பு சாகுபடி முறை செயல்படுத்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தென்னை சாகுபடி செய்யும் விவசாயிகள் கொப்பரையை உலர வைத்திட ஏதுவாக சூரியஒளி உலர்கலன் அமைக்க ரூ.50 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தின் தேவைக்காக யூரியா 4 ஆயிரத்து 924 டன்னும், டிஏபி 2 ஆயிரத்து 802 டன்னும், பொட்டாஷ் 5 ஆயிரத்து 906 டன்னும், காம்ப்ளக்ஸ் உரங்கள் 3 ஆயிரத்து 818 டன்னும் அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் தனியார் விற்பனை நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டு வினியோகம் செய்யப்பட்டு வருகின்றது. 155 நேரடி நெல் கொள்முதல் நிலையம்

மின்மாற்றிகள் உடனுக்குடன் பழுது நீக்கம் செய்து விவசாயிகளுக்கு சீரான மின்வினியோகம் வழங்கப்பட்டு வருகிறது. தற்சமயம் விவசாயத்திற்காக 12 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. தேவைக்கு ஏற்ப கூடுதல் மின்மாற்றிகள் மற்றும் மின்கம்பிகளின் திறன் உயர்த்தி அமைத்து தரமான தடையில்லா மின்சாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையில் இணை மின்சாரம் உற்பத்தி மற்றும் ஆலையை நவீனமாக்குதல் திட்டப்பணிகள் விரைவில் முடிக்கப்படும்.தஞ்சை மாவட்டத்தில் 155 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. நெல் வரத்துக்கு ஏற்ப நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படும். விவசாயிகளின் நலன் கருதி ஈரப்பதம் 17 சதவீதம் முதல் 20 சதவீதம் வரை நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு இதேநாளில் 816 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருந்தது. நடப்பு பருவத்தில் 48 ஆயிரத்து 345 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு ரூ.68 கோடியே 41 லட்சம் நெல் கொள்முதல் தொகையாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

<u>விவசாயிகள் வெளிநடப்பு</u>

முன்னதாக கூட்டம் தொடங்கியவுடன் கரும்பு டன்னுக்கு ரூ.4 ஆயிரம் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கலெக்டர் சுப்பையன் மற்றும் அதிகாரிகள் முன் கூடி நின்று கோஷங்கள் போட்டனர். பின்னர் விவசாயிகள் அனைவரும் கோஷங்கள் போட்டவாறு கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்தனர். இதையடுத்து கலெக்டர் அலுவலக வளாகத்தில் கரும்புகளை கையில் ஏந்தியபடி விவசாயிகள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

**கால்நடை மருத்துவ ஆராய்ச்சி மையத்தில் ஆடு வளர்ப்பு பயிற்சி முகாம் 30–ந்தேதி நடக்கிறது**



தஞ்சாவூர்,

தஞ்சை கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் தஞ்சை–திருச்சி சாலையில் வட்டார போக்குவரத்து அலுவலகம் அருகில் உள்ளது. இந்த மையத்தில் வருகிற 30–ந்தேதி காலை 10 மணிக்கு ஆடு வளர்ப்பு மற்றும் முதலுதவி மூலிகை மருத்துவ பயிற்சி முகாம் நடக்கிறது.

மேலும் விவரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், கால்நடை மருத்துவ பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், தஞ்சாவூர் என்ற முகவரிக்கு சென்று அறிந்து

கொள்ளலாம். தொலைபேசி எண்: 04362–204009, செல்போன் எண்: 98424–55833 ஆகியவற்றிலும் தொடர்பு கொண்டு விவரங்களை தெரிந்து கொள்ளலாம். பயிற்சிக்கு வரும் அனைவரும் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை கொண்டு வர வேண்டும்.

மேற்கண்டவாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**கோமாரி நோயால் கால்நடைகள் இறப்பு: பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க கோரி தி.மு.க.வினர் ஆர்ப்பாட்டம் திருவாரூரில் நடந்தது**



திருவாரூர்,

கோமாரி நோய் பாதிப் பிற்கு நிவாரணம் வழங்க கோரி திருவாரூரில் நேற்று தி.மு.க.-வினர் ஆர்ப்பாட்டம் செய் தனர்.

<u>ஆர்ப்பாட்டம்</u>

திருவாரூர் மாவட்ட தி.மு.க. விவசாய அணி மற்றும் விவசாய தொழிலாளர் அணி சார்பில் கோமாரி நோய் பாதிப்பால் இறந்த கால் நடைகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும், விவ சாயத்தை பாதுகாக்க தேவை யான முன் எச்சரிக்கை நட வடிக்கைகளை எடுக்க வேண் டும், விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீட்டு தொகையை உடனடியாக வழங்க வேண்டும் என்பன போன்ற கோரிக்கை களை வலியுறுத்தி நேற்று திரு வாரூர் கலெக்டர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம்நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் தலைமை தாங்கினார். முன்னாள் அமைச்சர்கள் மதிவாணன், அழகு திருநாவுக்கரசு, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் தேசபந்து, மாவட்ட விவசாய தொழி லாளர் அணி அமைப்பளர் மகாலிங்கம் ஆகியோர் முன் னிலை வகித்தனர். ஆர்ப் பாட்டத்தில் தி.மு.க. மாவட்ட செயலாளர் பூண்டி கலை வாணன் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார்.

அப்போது அவர் கூறிய தாவது:-

<u>கோமாரி நோய் பாதிப்பு</u>

விவசாயிகளுக்கான பயிர் காப்பீட்டு பிரீமியத் தொகையை தமிழக அரசு செலுத்த தவறியதால் விவ சாயிகளுக்கு காப்பீட்டுத் தொகை இதுவரை கிடைக்க வில்லை. விலையில்லா கால் நடைகள் வழங்கும் திட்டத்தின் கீழ் அண்டை மாநிலங்களில் இருந்து நோயால் பாதிக்கப் பட்ட ஆடு, மாடுகள் கொள் முதல் செய்யப்பட்டன. அண்டை மாநிலங்களில் கொள்முதல் செய்யப்பட்ட நோய் பாதித்த கால்நடைகள் வினியோகம் செய்யப்பட்ட தால், திருவாரூர் மாவட்டத்தில் கோமாரி நோய் பெரிய பாதிப்பை ஏற்படுத்தி உள் ளது.

<u>முன் எச்சரிக்கை நடவடிக்கை</u>

திருவாரூர் மாவட்டத்தில் கோமாரி நோயால் இறந்த கால்நடைகளுக்கு உரிய நிவாரணத்தை பாதிக்கப் பட்டவர்களுக்கு வழங்க வேண்டும். திருவாரூர் மாவட் டத்தின் பெரும் பகுதிகளில் அறுவடைக்கு தயார் நிலை யில் உள்ள நெற்பயிர்கள் பூஞ்சை நோயால் பாதிக்கப் பட்டுள்ளன. இதனால் அறு வடை பணிகள் பாதிப்பு அடைந்து விவசாயிகள், விவ சாய தொழிலாளர்கள் பாதிக் கப்பட்டுள்ளனர். திருவாரூர் மாவட்டத்தில் விவசாய தொழிலில் ஏற்படும் நஷ் டத்தை தடுப்பதற்கு தேவை யான முன் எச்சரிக்கை நட வடிக்கைகளை அரசு மேற் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் கூறி னார்.

ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட பொருளாளர் சித்தமல்லி சோமசுந்தம், நகர செயலாளர் சங்கர், ஒன்றிய செயலாளர் சுப்பிரமணியன், நகர சபை துணைத்தலைவர் செந்தில், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இளையராஜா, துணை அமைப்பாளர் ரஜினி சின்னா, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அமுதா சேகர், மாவட்ட கலை இலக் கிய அணி அமைப்பாளர் கருணாநிதி மற்றும் ஒன்றிய, நகர பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

**எண்ணெய் பனை பயிர் செய்து மாதந்தோறும் விவசாயிகள் வருவாய் பெறலாம் வேளாண்மை உதவி இயக்குனர் தகவல்**



கிருஷ்ணராயபுரம்,

எண்ணெய் பனை விவசாயம் செய்தால் விவசாயிகள் மாதாந்திர வருவாய் பெறலாம். என அதிகாரிகள் விவசாயி களுக்கு வேண்டுகோள் விடுத்து உள்ளனர்.

இதுகுறித்து வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பாலகிருஷ்ணன் கூறியதாவது:–

300 ஏக்கர் எண்ணெய் பனை

‘‘கரூர் மாவட்டத்தில் சுமார் 300 ஏக்கரில் எண்ணெய்பனை நடப்பட்டு வளர்ந்து வருகிறது. இந்த எண்ணெய்பனை நடப்பட்ட 3–வது ஆண்டில் இருந்து 30ஆண்டுகள் வரை மகசூல் கொடுக்கும். விவசாயிகள் இதன் மூலம் மாதாந்திர வருவாய் பெறலாம். மற்ற எண்ணெய் வித்துக்கள் அதாவது விதைகள் மூலம் எண்ணெய் எடுக்கப்படுகிறது. ஆனால், இந்த எண்ணெய்பனையில் பழங்கள் மூலம் நேரடியாக எண்ணெய் எடுக்கப் படுகிறது.

மேலும், எண்ணெய்பனை விரிவாக்க மானியமாக ஒரு ஹெக்டேருக்கு ரூ.10ஆயிரம் மதிப்புள்ள மரக்கன்றுகள் வழங்கப்படுகிறது. நடவு மானியமாக ரூ.6ஆயிரமும், சொட்டுநீர் பாசனமாக இருந்தால் ரூ.10ஆயிரமும், டீசல், மின் மோட்டார் வாங்குவதற்கு ரூ.10ஆயிரமும், ஊடு பயிர் சாகுபடிக்காக ரூ.5ஆயிரமும், உரநிர்வாகம் மற்றும் பயிர்பாதுகாப்பிற்காக ரூ.5ஆயிரமும், மண்புழு உரக்குழி தொட்டி கட்டிட ரூ.15 ஆயிரமும் மானியமாக வழங்கப்படுகிறது.

மானியம்

இதுதவிர 2–ம் ஆண்டு பராமரிப்பு மானியம் ரூ.3,500–ம், 3–ம் ஆண்டு பராமரிப்பு மானியமாக ரூ.4,500–ம் 4–ம் ஆண்டு பராமரிப்பு மானியமாக ரூ4,100–ம், வழங்கப்படுகிறது. அறுவடை கருவி மானியம் ரூ.3,300–ம் வழங்கப்படுகிறது.இவ்வாறு அவர் தெரிவித் தார்.

மரக்கன்றுகள்

காட்ரெஜ் அக்ரோ நிறுவன அரியலூர் எண்ணெய்பனை ஆலையின் பொது மேலாளர் அண்ணாமலை கூறும்போது, ‘‘அரியலூரில் இருக்கும் எண்ணெய்பனை பிழிந்தெடுக்கும் ஆலையில் தேவையான மரக்கன்றுகளை பெற்றுக் கொள்ளலாம். அறுவடை செய்த 48 மணி நேரத்தில் ஆலைக்கு கொண்டு வர வேண்டும். கரூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் குளித்தலையில் உள்ள சேமிப்பு மையத்தில் கொடுத்து எடை போட்டு பில் பெற்றுக் கொள்ளலாம். விவசாயிக்கு உரிய தொகை 7 நாட்களில் கிடைக்கும் வகையில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது."

ஹெக்டேருக்கு 30 டன் மகசூல்

எண்ணெய்பனை விவசாயி மகாதானபுரம் ராஜாராம் கூறும்போது, கடந்த 1994–ம் ஆண்டு முதல் இந்த எண்ணெய்பனையை பயிரிட்டு வளர்த்து வருகிறேன். முதலில் 10 ஏக்கர் பரப்பளவில் பயிர் செய்தேன். தொடர்ந்து 15 ஏக்கரில் பயிர் செய்தேன்.

தற்போது 25 ஏக்கரில் இந்த பயிர் செய்து வருகிறேன். ஒரு ஹெக்டேருக்கு 145 எண்ணெய் பனை மரக் கன்றுகள் நடவு செய்யலாம். 3–வது ஆண்டில் இருந்து ஒரு ஹெக்டேருக்கு சுமார் 30 டன் மகசூல் பெறலாம். 10 நாட்களுக்கு ஒரு முறை அறுவடை செய்யலாம். இதில் விவசாய பராமரிப்பு செலவு குறைவு, பூச்சி நோய் தாக்குதல் கிடையாது. திருடு போக வாய்ப்பில்லை, இந்த எண்ணெய்பனையில் ஊடு பயிராக கடலை, வாழை, சூரியகாந்தி, எள், மற்றும் பயிறு வகைகளை பயிரிட்டு பயன் பெறலாம்"

இவ்வாறு அவர் கூறினார்.

**காந்தி மார்க்கெட்டிற்கு கரும்புகள் விற்பனைக்கு வர தொடங்கின 10 கரும்புகள் கொண்ட ஒரு கட்டு ரூ 250**



திண்டுக்கல்,

திண்டுக்கல் காந்தி மார்க்கெட்டிற்கு கரும்புகள் விற்பனைக்கு வர தொடங்கின. 10 கரும்புகள் கொண்ட ஒரு கட்டு ரூ.250–க்கு விற்பனை செய்யப்பட்டன.

பொங்கல் பண்டிகை

பொங்கல் பண்டிகை என்றாலே நினைவுக்கு வருவது தித்திக்கும் கரும்பு தான். இந்த பொங்கல் பண்டிகையையொட்டி கரும்பு விற்பனை களை கட்ட தொடங்கிவிடும். திண்டுக்கல் மாவட்டத்தில் சாணார்பட்டி மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் விளையும் கரும்புகள் பொங்கல் பண்டிகையையொட்டி அறுவடை செய்யப்பட்டு வருகிறது.

இந்த கரும்புகள் திண்டுக்கல் காந்தி மார்க்கெட்டிற்கு விற்பனைக்கு வரத் தொடங்கி உள்ளன. அவை தரத்திற்கேற்ப விலை நிர்ணயம் செய்யப்பட்டு, விற்பனை செய்யப்படுகின்றன. பொங்கல் பண்டிகைக்கு 15 நாட்களுக்கு மேல் இருப்பதால் விற்பனைக்கு வரும் கரும்புகளின் எண்ணிக்கை தற்போது குறைவாக உள்ளது.

<u>கரும்பு வரத்து</u>

கரும்புகள் விற்பனை குறித்து வியாபாரி ஒருவரிடம் கேட்ட போது, ‘கடந்த ஆண்டை காட்டிலும் இந்த ஆண்டு கரும்பு விளைச்சல் குறைவாக தான் உள்ளது. பருவமழை போதிய அளவு இல்லாததால் கரும்புகள் சரியான நேரத்தில் அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. இதனால் இந்த ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு விற்பனைக்கு வந்து இருக்கும் கரும்புகள் விலை சற்று அதிகரித்துள்ளது. அதில் 10 எண்ணிக்கை கொண்ட முதல் தரமான கரும்புகள் ஒரு கட்டு விலை ரூ.250–க்கும், சற்று தரம் குறைவாக உள்ள கரும்புகள் ஒரு கட்டு விலை ரூ.150–ல் இருந்து ரூ.50 வரைக்கும் விற்கப்படுகிறது. கடந்த ஆண்டு முதல் தரமான கரும்புகள் ஒரு கட்டு விலை ரூ.200 வரை விற்கப்பட்டது. அடுத்த மாதம் (ஜனவரி) 10–ந் தேதியில் இருந்து கரும்புகளின் வரத்து அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. அப்போது கரும்புகள் விலையில் மாற்றம் ஏற்படும்’ என்றார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தூத்துக்குடி: ரூ.32.82 கோடியில் மீன் இறங்கு தளம்




தூத்துக்குடி மாவட்டத்தில் தருவைகுளம், திரேஸ்புரத்தில் ரூ. 32.82 கோடி மதிப்பீட்டில், நவீன மீன் இறங்கு தளங்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதன் மூலம் மீன்களை சுகாதாரமாகக் கையாண்டு, ஏற்றுமதியை அதிரித்து, மீனவர்கள் தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

### 40 ஆயிரம் டன்

தமிழகத்தில் உள்ள கடலோர மாவட்டங்களில், 163.5 கி.மீ. கடற்கரையைக் கொண்டது தூத்துக்குடி. இம்மாவட்டத்தில் விவசாயத்துக்கு அடுத்தபடியாக, மீன்பிடித்தல் மிக முக்கியத் தொழிலாக விளங்குகிறது. 24 கடலோரக் கிராமங்களில், 50 ஆயிரம் மீனவர்கள் மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். பதிவு செய்யப்பட்ட 448 விசைப்படகுகள், 2,073 நாட்டுப்படகுகள், 1,606 பைபர் படகுகள், 1,022 கட்டுமரங்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றன. இம்மாவட்டத்தில் ஆண்டுக்கு சராசரியாக 40 ஆயிரம் டன் அளவுக்கு மீன்கள் பிடிக்கப்படுகின்றன.

### ஏற்றுமதியில் தர மேம்பாடு

தூத்துக்குடி மாவட்டத்தில் இருந்து மீன், இறால் போன்ற கடல்உணவுப் பொருட்கள் அதிகளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஏற்றுமதி மூலமே மீனவர்களுக்கு அதிக வருவாய் கிடைக்கிறது. ஆனால், மீன்களை இறக்குமதி செய்யும் நாடுகள் தரத்தை முக்கியமாக எதிர்பார்க்கின்றன.

குறிப்பாக மீன்கள் சுகாதாரமான முறையில் கையாளப்படுகின்றனவா என்பது முக்கிய அம்சமாக பார்க்கப்படுகிறது. மீன்கள் சுகாதாரமான முறையில் கையாளப்படாததால், பெரும்பாலான மீன்களை ஏற்றுமதி செய்ய முடியாமல் போய்விடுகிறது.

### மீன் இறங்கு தளங்கள்

இதனைக் கருத்தில் கொண்டு, மீன்களை சுகாதாரமான முறையில் கையாள, பல்வேறு வசதிகளை தமிழக அரசு மீனவ கிராமங்களில் ஏற்படுத்தி கொடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதிதான் மீன் இறங்கு தளங்கள். அந்த வகையில், தூத்துக்குடி மாவட்டத்தில் தருவைகுளம் மற்றும் திரேஸ்புரத்தில் இரண்டு நவீன மீன் இறங்கு தளங்கள் அமைக்க அரசு உத்தரவிட்டு, அதற்கான பணிகள் தொடங்கி உள்ளன. தருவைகுளத்தில் நபார்டு கிராமப்புற உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி உதவியுடன், ரூ. 16.26 கோடி மதிப்பீட்டில் மீன் இறங்கு தளம் அமைக்கப்பட்டு வருகிறது. அதுபோல, திரேஸ்புரத்தில் ரூ. 16.56 கோடியில் நவீன மீன் இறங்கு தளம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

### பணிகள் வேகம்

மீன்வளத்துறை அதிகாரிகள் கூறியதாவது:

மீன் இறங்கு தளங்களில் படகுகள் நிறுத்தும் ஜெட்டி, அலை தடுப்புச் சுவர், நவீன மீன் ஏலக்கூடம், வலை பின்னும் கூடம், கழிப்பறைகள், கான்கிரீட் சாலைகள், மின் விளக்குகள், குடிநீர் வசதிகள் போன்ற அனைத்து அடிப்படை வசதிகளும்

செய்யப்படுகின்றன. திரேஸ்புரம் மீன் இறங்கு தளத்தில் இன்றைய தேதியில் 79.52 சதவீத பணிகள் முடிவடைந்துள்ளன. இங்கு பணிகள் முடிக்கப்படவேண்டிய நாள் 17.9.2014. ஆனால், 2014 மார்ச் மாதமே பணிகள் முடிவடையும் என எதிர்பார்க்கிறோம். அதுபோல தருவைகுளம் மீன் இறங்கு தளத்தில் 57.49 சதவீத பணிகள் முடிவடைந்துள்ளன. இந்த பணிகளும் இன்னும் 6 மாதங்களில் முடிவடையும் என எதிர்பார்க்கிறோம்.

இப்பணிகள் முடிவடைந்ததும் இப்பகுதியில் மீன்கள் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் கையாள முடியும். இதன் மூலம் மீன்வர்கள் பிடித்து வரும் மீன்களுக்கு ஏற்றுமதி மதிப்பு அதிகரிக்கும். மேலும், மீனவர்கள் தங்கள் படகுகளை பத்திரமாக கரையில் நிறுத்தவும் முடியும்.

**மீன்பிடித் துறைமுக மேம்பாடு**

இதேபோல் தூத்துக்குடியில் உள்ள மீன்பிடித் துறைமுகத்திலும் மீன்களை சுகாதாரமான முறையில் கையாள, பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் ரூ. 12.05 கோடியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கான்கிரீட் தளம் அமைத்தல், மின் விளக்குகள் அமைத்தல், கழிவுநீர் வடிகால் அமைத்தல், கழிவுநீர் சுத்திகரிப்பு வசதி செய்தல், மீன் ஏலக்கூடம், வலைபின்னும் கூடம் போன்றவற்றை சீரமைத்து மேம்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த பணிகளும் அடுத்த ஓரிரு மாதங்களில் முடிவடையும் என்றனர் அவர்கள்.